INITHU INITHU
Monthly Magazine

# இனிது இனிது

பல்சுவை மாத இதழ்

இனிமை! சுவை! ஜூன் 15 – ஜூலை 15. 2011



50/=

## காதலின் மொழி
## கஸல்

உன் முகவரி
தேடியலைந்தேன்
கிடைத்துவிட்டது

இப்போது
என் முகவரி
தேடி அலைகிறேன்

## 2040 ஆம் ஆண்டில்
இறந்தவர்கள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்..?

## இந்தியாவின் 50 000 வீடுகள்.?
ஒரு கனவுத் திட்டமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வணக்கம்

'இனிது இனிது' முதலாவது இதழ் உங்கள் கைகளில் தவழ்கிறது. பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதான, பல்சுவை அம்சங்களைக் கொண்டதான ஓர் இதழின் தேவை காலத்தின் தேவையாக, வாசகர்களின் தேவையாக உணரப்பட்ட காரணத்தினாலேயே 'இனிது இனிது' இதழின் வரவு நிகழ்ந்துள்ளது.

இங்கு சமகாலத்தில் பல்வேறு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஆனால், பரவலாக அவை மக்களிடம் சென்று சேர்வதில்லை. வெளிவருகின்ற சஞ்சிககைகள் பற்றிய விபரங்கள் கூட வாசகர்களுக்கு தெரியவருவதில்லை. ஆனால், சில சஞ்சிகைகளை சிலர் தேடி வாசிக்கின்றனர். அல்லது குறிப்பிட்ட ஓர் வாசகர் வட்டத்திற்காகவே அச்சஞ்சிகைள் வெளியிடப் படுகின்றன. இவற்றிற்கப்பால், பரந்தளவிலான வாசகர் வட்டத்தை விரிவு படுத்த 'இனிது இனிது' முயலும்.

பல்வேறுபட்ட இரசனைகளையும் கொண்ட வாசகர்களைத் திருப்திப் படுத்தும் நோக்கிலேயே 'இனிது இனிது' வெளிப்பாடுகள் அமையும். வாசகர்ளின் இரசனையை விசாலிப்பதும் புதிய வாசகர்களை உருவாக்கு வதும் அதன் எண்ணம்.

பகிர்ந்து கொள்வதும், அதனூடாக உறவுகளை வளர்த்துக் கொள்வதும் ஊடகத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று.

வாசகர்கள் பல்வேறு இரசனையுடையவராக இருக்கும் போது திணிப் பாக சிலவற்றை மட்டும் சொல்ல வருகையில் அதிலிருந்து அவர்கள் விலகிச்செல்லும் நிலை ஏற்படலாம்.

எழுத்தாளர்- இதழாசிரியர் தனது திறமையை அல்லது தன்னிடமிருக்கும் 'கொள்ளளவை' மற்றவருக்கு காண்பிக்க முயலும் போது வாசகன் சிரமப்படும் நிலை ஏற்படுகின்றது. 'சீரியஸான' வற்றை மட்டுமே வாசிக்கச் செய்யும் நோக்கிலான இதழ்கள் பரந்துபட்ட வாசகர்களிடமிருந்து அந்நியப்படுவதை அவதானிக்க முடிகிறது.

முக்கியமான விடயங்களை அறிந்து கொள்ள விழைபவர்கள் கூட சுவாரஸ்யமான வாசிப்பையே அதிகம் விரும்புகின்றனர். இதனால்தான் அரசியல் பத்தி எழுத்தாளர்கள் கூட தங்களின் நடையை மாற்றிக் கொள்ள முயல்கின்றனர். அரசியல் விடயங்களைக் கூட ஒரு கதை போல் சொல்ல முற்படுகின்றனர்.

இவ்வாறாக வாசகனின் உளவியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத்து அதன் வடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

எந்த மனிதனும் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகின்றான். உளநெருக்கடிகளிலிருந்து விடுபடக்கூடிய வழிகளை நாடுகின்றான். அறிவைக்கூட அழுத்தங்களின்றி மகிழ்ச்சியான வழிமுறைக் கூடாகவே கற்றுக்கொள்ள விரும்புகின்றான்.

அவ்வகையில், வாசகர்களின் உளவியலைப் புரிந்து கொண்டு அவர்களுடன் உறவுகொள்ள 'இனிது இனிது' முயலும். அத்திசை வழியில் இனிது இனிது பயணிக்க வாசகர்களாகிய உங்கள் கருத்துக்கள் பெரிதும் எதிர்பார்க்கப் படுகின்றன.

அன்புடன்
**ஆசிரியர்**

06




22




26



46





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பினால் கிடைத்த




■ ஆதித்தன்

தமிழக மக்களுக்கு தி.மு.க ஆட்சியின் மீதிருந்த வெறுப்பே அ.தி.மு.கவை ஆட்சியிலமர்த்தியிருக்கின்றது. செல்வி. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க நடந்து முடிந்த 14வது சட்டசபைத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றமைக்கு காரணம் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசின் ஊழல் ஆட்சிதானே தவிர வேறொன்றுமில்லை.

கடந்த காலங்களாக அ.தி.மு.க பெரியளவில் தமது பிரசார நடவடிக்கைளில் ஈடுபடவில்லை. அல்லது தி.மு.க வின் ஊழல் மோசடிகளுக்கு எதிராக பெரியளவிலான போராட்டங்கள் எதனையும் செய்யவில்லை. வைகோ, சீமான், விஜயகாந்த் போன்று கூட ஜெயலலிதா உரத்து எதனையும் கூறவில்லை. இந்தப் பாரிய வெற்றிக்கு அ.தி.மு.கவின் பங்கு எதுவும் இல்லை என்றுதான் கூற வேண்டும்.



ஜெயலலிதா சிறிது நாட்களாக எங்கிருந்தார் என்பது கூட தெரியாது. பல நாட்கள் அவர் கேரளத்து கொடநாட்டில் ஓய்வு பெற்று வந்ததாக கூறப்படுகின்றது. பின்னர் தேர்தல் கூட்டணி அமைக்கப்பட்ட போது வைகோவை அதிலிருந்து நீக்கியமை, கூட்டணிக் கட்சிகளை அவமதிக்கும் விதமாக அவர்களுக்குத் தெரியாமல் வேட்பாளர் பட்டியலை முன்கூட்டி வெளியிட்டமைபோன்ற செயற்பாடுகளும் நடைபெற்றன. இதனால் கூட்டணிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டன. மக்கள் மத்தியிலும் சந்தேகங்கள் ஏற்பட்டன. இருந்தும் அ.தி.மு.க விற்கு அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

அ.தி.மு.க கூட்டணி 234 தொகுதிகளில் போட்டியிட்டு 203 இடங்களை வென்றுள்ளது. அதை விடவும், தனித்துப் போட்டியிட்ட 160 தொகுதிகளில் 150 தொகுதிகளில் அது வெற்றி பெற்றுள்ளது. 117 தொகுதிகள் கிடைத்தாலே தனியாக ஆட்சியமைக்கப் போதமானதாகும். ஆனால். 150 தொகுதிகள் அ.தி.மு.க விற்கு தனித்துக் கிடைத்துள்ளது.

கடந்த தேர்தலின் போது ஒரு தொகுதியை மட்டும் வென்ற விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இம்முறை 40 தொகுதிகளில் போட்டியிட்டு 29 தொகுதிகளில் வென்றுள்ளது. தி.மு.க கூட்டணியாக 31 தொகுதிகளை மட்டுமே வென்றுள்ளது. தனித்து அதற்கு கிடைத்த தொகுதிகள் 23 மட்டுமே. தி.மு.க எதிர்க்கட்சியாகும் நிலையைக்கூட இழந்து விட்டமைதான் அவமானம்.

திமு.க ஆட்சியில் இடம்பெற்ற குடும்ப ஆதிக்கம் மட்டுமல்ல, கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் தொடக்கம் சாதாரண பஞ்சாயத்து தலைவர்கள் வரை ஊழல் மோசடியில் ஈடுபட்டு பெருந்தொகைப் பணத்தை சுருட்டியிருக்கின்றார்கள். பினாமிகளின் பெயரில் தொழில் துறைகளையும் நடத்தி வருகின்றார்கள். இப்போது அவர்கள் எல்லாரும் தி.மு.க தோல்விக்காகக் கூட கவலைப்படத் தேவையில்லை என்கிற அளவிற்கு பணத்தைச் சேர்த்துள்ளனர்.

கருணாநிதி ஒரு ரூபாவிற்கு ஒரு கிலோ அரிசியை வழங்கிய போதிலும் மற்றும், சில இலவசங்களைக் வழங்கியுள்ள போதிலும் விலைவாசி உயர்வு என்பது மக்களைப் பெருமளவில் பாதித்துள்ளது.


தமிழக மக்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்குச் செலுத்திவரும் சினிமாத்துறையினரும் தி,மு.க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி !






ஆட்சிக்கு எதிராகவே செயற்பட்டனர். காரணம் கருணாநிதியின் குடும்பத்திற்குச் சொந்தமான சன் மற்றும், கலைஞர் தொலைக்காட்சியின் ஆதிக்கம்: தயாநிதி, உதயநிதி, ஸ்டாலின், அழகிரி போன்றோரின் ஏகபோகமாக சினிமாத்துறையை மாற்றியமை போன்றவை இவற்றிற்கு காரணங்களாகும்.

தேர்தல் காலத்தில் சூடுகிளப்பிய ஸ்பெக்ரம் 2ஜி அலைக்கற்றை விவகாரமும் ஊடகங்கள் அதற்குக் கொடுத்த முக்கியத்தவமும் கூட தி.மு.கவின் சரிவிற்கு வழிசமைத்தன.

இவற்றைவிடவும் ஈழத்தமிழர்கள் தொடர்பான விவகாரம் கருணாநிதியை தமிழின விரோதி என்ற நிலைக்குத் தள்ளியது. சீமான், வைகோ உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் இதனையே கருணாநிதி மீதான பாரிய குற்றச் சாட்டாக முன்வைத்தனர். மக்கள் மத்தியில் தீவிரமாக பரப்புரை செய்தனர். தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியை அகற்ற வேண்டும் என்பதே இவர்களின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. தமிழக மக்கள் மத்தியிலும் அது ஓர் உணர்வு சார்ந்த, உணர்ச்சி சார்ந்த விடயமாகவே இருந்தது.



அடுத்தது - நடிகர் விஜயின் செல்வாக்கு. அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரின் நெறிப்படுத்தலில் விஜயின் இரசிகர் மன்றத்தின் ஆதரவு அ.தி.மு.க விற்கு ஆதரவாக திரட்டப்பட்டது. அ.தி.மு.க வின் வெற்றிக்கு விஜயின் செல்வாக்கு முக்கிய காரணம் என அவரது தந்தை நினைக்கின்றார். (விஜயை அரசியலுக்கு கொண்டுவர திட்டமிட்டு முயன்று வரும் அவரது தந்தையின் ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையாகவும் இதனைப் பார்க்கலாம்) தான் நினைத்தது நடந்துவிட்டது என விஜய் பெருமைப் படுகின்றார். இதைவிடவும் சுப்பிரமணிய சுவாமி தி.மு.கவிற்கு எதிராக இலத்திரனியல் ஊடகங்களில் வழங்கிய சில செவ்விகளும் அதன் தோல்விக்கு பலம் சேர்த்துள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இப்படி எல்லாத்தரப்பின் செயற்பாடுகளும் தி.மு.கவின் ஆட்சியை இல்லாமல் செய்வதற்கு வழி வகுத்தன. ஆக, தமிழகத்தில் ஒரு ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படுவதற்காக தமிழகத்தின் செல்வாக்கு மிக்க சகல தரப்புகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளே அ.தி.மு.க வெற்றி பெற வழிசமைத்தன.

ஆனாலும், அ.தி.மு.க விற்கு தனித்துக் கிடைத்துள்ள அறுதிப் பெரும்பான்மை எதிர்வரும் காலங்களில் அதிலுள்ள கூட்டணிக் கட்சிகளின் செல்வாக்கினை இழக்கச்செய்து விடலாம் என்பது தான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகிறது.



கடந்தகால அனுபவங்கைளைக் கொண்டு பார்க்கும் போது பல விடயங்களில் தி.மு.க விற்கும் அ.தி.மு.க விற்கும் பாரிய வித்தியாசங்கள் இருந்ததில்லை.

ஈழத்தமிழர் பிரச்சனைகளில் முன்னர் விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டத்தை கடுமையாக எதிர்த்தவர் ஜெயலலிதா. இன்று விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக அவர் குரல் கொடுக்கலாம். மத்திய அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம் அதற்கான பலம் அவருக்கின்றது.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியும் எப்படியும் தமக்கு ஆதரவாக அ.தி.முகாவை வளைத்துக் கொள்ள முயலும் என்பது வெளிப்படை. அப்போது அ.தி.மு.கவும் சில பேரம் பேசுதல்களை காங்கிரசுடன் மேற்கொள்ளலாம். அதில் பிரதான பேசுபொருளாக ஈழத்தமிழர் விவகாரம் அமையுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் மொழி

# 'கஸல்'

காதல் என்பது
நம் வசத்தில் இல்லை
அது ஒரு
விநோதமான நெருப்பு
பற்ற வைத்தால்
பற்றாது
அணைத்தால்
அணையாது

இது கவிஞர் மிர்சாலிப் வடித்த கவிதைகளில் ஒன்று

## கவிஞர் அப்துல் ரகுமானின் சில கவிதைகள்

கஸல் ('Gazal) உருது மொழியின் ஒரு கவிதை வடிவம். ஈரடிச் சந்தங்கள் கொண்ட, மீளவரும் பல்லவியுடன் அமைந்த மரபுக்கவிதை. காதலையும், காதலின் பிரிவையும், அதன் துயரத்தையும், வலியையும் சொல்லுகின்ற கவிதை.

இக் கவிதை வடிவம் முதலில் அரபியில் தோன்றியதாக கூறப்படுகின்றது. 'அரபியில் அரும்பி பாரசீகத்தில் போதாகி உருதுவில் மலர்ந்து மணம் வீசும் அழகிய இலக்கியவடிவம்' 'கஸல்' என கவிஞர் அப்துல் ரகுமான் குறிப்பிடுகின்றார்.

'கஸல்' என்றால் 'காதலியிடம் பேசுவது' என்ற பொருள். கஸல் பெரும்பாலும் காதலையே பாடும். காதலின் சோகத்தைப் பாடும் என்கிறார் அவர்.

கவிஞர் அப்துல் ரகுமான் 'கஸலை' தமிழில் அறிமுகப்படுத்திய முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர். உருது மொழியில் அறிமுகப்படுத்தியவர் 'மிர்சாலிப்'. கஸல் என்றாலே அதில் 'மிர்சாலிப்' வாசம் வீசும் என்பார்கள். அந்தளவிற்கு சிறந்த 'கஸல்' கவிஞர் அவர். 12 ஆம் நூற்றாண்டில் தெற்காசியாவில் 'கஸல்' பரவத் தொடங்கியது. உருது மொழியில் எழுதப்பட்டாலும் காலப்போக்கில் பிற மொழிகளிலும் 'கஸல்' வடிவம் பெற்று வருகின்றது.


நாம் நிர்வாணமாக
கிடந்தோம்.
ஆடையாகக் கிடந்தது
காதல்.

உன் கண்களால் தான்
நான் முதன் முதலாக
என்னைப் பார்த்தேன்

எந்தை எடுப்பது
எதை விடுவது
தேநீர்க் கோப்பையிலும் நீ
மதுக்கோப்பையிலும் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன் முகவரி
தேடி அலைந்தேன்
கிடைத்து விட்டது.
இப்போது
என் முகவரி
தேடி அலைகின்றேன்.

நீ விளையாடி
உடைப்பதற்காகவே
இதயங்கள்
படைக்கப்பட்டிருக்கின்றன.
உன் கடிதம் வந்தது
திறக்காமலே
படித்துவிட்டேன்

வா, மறதியின் இருட்டில்
ரகசியமாய் சந்திப்போம்
உன் கண்களுக்கு அஞ்சி
என் இதயத்தை
காயத்திற்கு அடியில்
மறைக்கிறேன்.

என் உயிரைக்
காதலில் ஒளித்து வைத்து
விட்டேன்
மரணமே
இனி என்ன செய்வாய்?

இன்னும் சில கவிதைகள் ஏனைய சில பக்கங்களிலும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓசாமா பின்லேடன்

# தொடக்கமும் முடிவும்..


**சவுதி** அரேபியாவில் செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர் ஒசாமா பின்லேடன். இவரது தந்தை மற்றும் குடும்பத்தினர் பாரிய கட்டட நிர்மாணத் தொழிலை மேற்கொண்டு வந்தவர்கள். இவர்களே சவுதி ஆரேபியாவின் 80 வீதமான வீதிகளை அமைத்தவர்கள் என்று சொல்லப்படுகின்றது. செல்வம் கொழித்த இக்குடும்பத்திலுள்ள 52 பிள்ளைகளில் 17வது பிள்ளையாக 1957ஆம் ஆண்டு பின்லேடன் பிறந்தார்.

ஆப்கானிஸ்தானை சோவியத்யூனியன் ஆக்கிரமித்த போது அதற்கெதிராக முஜாகிதீன் தீவிரவாத அமைப்பில் இணைந்து போராட அங்கு சென்று விட்டார். இவரை அப்போது அமெரிக்காவே பயன்படுத்தியது. ஆப்கானில் தன்னைப் பின்பற்றிய அரபுக்களை இணைத்து பின்னாளில் அல்குவைதா அமைப்பை உருவாக்கினார்.

பின்னர் தனது சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்தார். குவைத்தை ஆக்கிரமித்த ஈராக் படைகளை அகற்ற அமெரிக்கப் படைகளுக்கு சவுதி அரேபியா தனது மண்ணில் இடம்கொடுத்தமையை அவர் கடுமையாக எதிர்த்தார். அமெரிக்கா மீதான வெறுப்பும் கோபமும் அவர் மனதில் தீயாய் கனன்றது. 1988ஆம் ஆண்டு பின்லேடன் அனைத்து அமெரிக்கர்களுக்கு எதிராகவும் போர்ப் பிரகடனம் செய்தார்.

அமெரிக்க இராணுவ இலக்குகள் மட்டுமல்லாமல் பொதுமக்கள் உட்பட அனைத்து இலக்குகளும் தாக்கப்படும் என அவர் தனது மதத்தின் பெயரால் பிரகடனம் செய்தார். அவர் போர் பிரகடனம் செய்த அதே ஆண்டில் ஆபிரிக்க நாடுகளிலிருந்த அமெரிக்கத் தூதரகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் பின்லேடனின் அல்குவைதா அமைப்பின் பின்னணி இருந்ததாக அமெரிக்கா நம்பியது. இதனையடுத்து ஆப்கானிலுள்ள பின்லேடனின் தளங்கள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை மேற் கொண்டது. அப்போது பில்கிளிங்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். ஏவுகணை பில்லேடனின் இடத்தை துல்லியமாக தாக்கிய போது அவர் அதிலிருந்து உயிர் தப்பினார். எப்படி என்றால் அவர் அத்தாக்குதல் நடைபெறுவதற்கு சற்றுமுன்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

அலகுவைதாவின் மற்றுமொரு நடவடிக்கையாக 2000ஆம் அண்டில் அமெரிக்காவின் பாரிய போர்க் கப்பல் சேதப்படுத்தப்பட்டது. ஏடன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யு.எஸ்.எஸ்.கூல் என்ற அக்கப்பலில் அல்குவைதா அமைப்பினர் பாரிய துவாரத்தை ஏற்படுத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அன்று அந்தப் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்லேடனின் அல்குவைதா அமைப்பினர் பயணிகள் விமானம் ஒன்றைக் கடத்தி புகழ்பெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தினர். நியூயோர்க்கிலும், வொஷிங்டனிலும் பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அன்றிலிருந்து பின்லேடன் அமெரிக்காவினால் குறி வைக்கப்பட்டார். அப்போதிருந்த அமெரிக்க ஜனாதிபதி பின்லேடனின் தலைக்கு 27 மில்லியன் டொலர் சன்மானம் வழங்குவதாக அறிவித்தார். அதன் பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து அவர் பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றார். அங்குள்ள மக்கள் சிலர் அவரைப் புனிதராக மதித்தனர். பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பழங்குடி மக்கள் பின்லேடனுக்கு ஆதரவு வழங்கினர். தன்னைத் தேடுபவர்களிலிடமிருந்து அவர் தப்பிக்கொள்ள இம் மக்களே பெரிதும் உதவியாக இருந்தனர். பின்லேடன்தான் உலகிலேயே அதிகமாகத் தேடப்படும் நபராக விளங்கினார்.

இந்நிலையில், பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்திலிருந்து 60 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள அபோதாபாத் என்ற இடத்தில் பின்லேடன் தங்கியிருந்தமை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ இன் கழுகுக் கண்களுக்கு தெரியவந்தது. அமெரிக்க இராணுவத்தினரின் பயங்கரவாதத்திற்கு எதிரான சிறப்புப் படைப்பிரிவு நான்கு ஹெலிகப்ரர்களில் அங்கு சென்றது. அங்கு அவரது வீட்டை முற்றுகையிட்ட அமெரிக்கப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் ஒசோமா பின்லேடன் கொல்லப்பட்டார்.

இந்த இராணுவ நடவடிக்கை மே மாதம் 2ஆம் திகதி திங்கள் அன்று பாகிஸ்தான் நேரப்படி அதிகாலை ஆரம்பமானது. அபோதாபாத்தில் பின்லேடன்



**பின்லேடனின் அல்குவைதா அமைப்பினர் பயணிகள் விமானம் ஒன்றைக் கடத்தி புகழ்பெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தினர். நியூயோர்க்கிலும், வொஷிங்டனிலும் பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அன்றிலிருந்து பின்லேடன் அமெரிக்காவினால் குறி வைக்கப்பட்டார்.**



தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்டு அமெரிக்க விசேடத் தாக்குதல் அணியான 'seal' (கடல், ஆகாய, தரைவெளித் தாக்குதல் அணி) தாக்குதலை மேற்கொண்டது.

தாக்குதல்களில் பங்கேற்ற அமெரிக்கப்படை வீரர்களின் தலைக்கவசங்களில் சிறிய நவீன கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இதன் மூலம் பெறப்பட்ட ஒளிப்பதிவுகள் செய்மதி ஊடாக வெள்ளைமாளிகையில் ஒளிபரப்பாகின. அந்நேரம் அமெரிக்காவில் ஞாயிறு பிற்பகலாக இருந்தது. தாக்குதல்கள் தொடங்க முன்னரே வெள்ளை மாளிகையிலுள்ள அறையொன்றில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, உப ஜனாதிபதி ஜோ பிடென், பாதுகாப்புச் செயலாளர் றொபேட் கேட்ஸ், இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிங்டன் மற்றும், படையதிகாரிகள் கொண்ட குழுவினர் கூடினர். அங்கிருந்து சுமார் 11ஆயிரம் கிலோ மீற்றர்கள் தொலைவில் நடைபெறும் தாக்குதல் நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிட்டனர்.


• • •

அமெரிக்கப்படையினரால் கொல்லப்பட்ட நிலையில் வெளியிடப்பட்டிருந்த ஒசோமா பின்லேடனின் படம் உண்மையானது அல்ல எனபதை நிரூபிக்கும் விதமாக இணையத்தளம் ஒன்று தகவல் வெளிட்டிருந்தது. அதனைப் பார்க்கும் போது உண்மையில் அது கொல்லப்பட்ட பின்லேடனின் படமல்ல என்பதை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆனால், இது குறித்து அமெரிக்கா எவ்வித கருத்தையோ விளக்கத்தையோ வழங்கவில்லை. (இப்படம் வேறு ஊடகங்களால் கூட சோடிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கலாம்) இதனால் பின்லேடன் கொல்லப்படவில்லை என்கிற வதந்திகளைக் கூட அவரது ஆதரவாளர்கள் வெளியிட்டிருந்தனர். ஆனால், பின்லேடனின் சகோதரியின் மரபணுவுடன் பின்லேடனின் மரபணு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு பின்லேடன் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, பின்லேடன் கொல்லப்பட்டமை குறித்து ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பல தகவல்களை பின்னர் அமெரிக்கா மாற்றிக் கொண்டுள்ளது. முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறப்பட்டதைப் போல அமெரிக்கப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்திய போது பின்லேடன் ஆயுதம் எதனையும் ஏந்தியிருக்கவில்லை. பின்லேடனின் மனைவி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என கூறப்பட்டதும் தவறு. பின்லேடன் தனது மனைவி ஒருவரை தனக்கு முன்னால் மனிதக் கேடயமாக அனுப்பி தப்ப முயன்றார் என்று கூறப்பட்டதும் தவறு. அவசர அவசரமாக தகவல்களை வெளியிடவேண்டி வந்ததால் அதில் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றுவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதியின் ஊடகத்துறைச் செயலாளர் ஜே.கார்னி தெரிவித்துள்ளார்.

• • •

சமீப காலமாக அமெரிக்காவில் தனது செல்வாக்கினை இழந்து வரும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிற்கு பின்லேடன் தமது படையினரால் கொல்லப்பட்டமை மகிழ்சியளிக்கும் விடயமாக உள்ளது. பின்லேடன் பதுங்கியுள்ள இடம் குறித்த உறுதியான தகவல் கிடைத்ததும் படையினர் என்னிடம் தெரிவித்தனர். நான் உடனடியாக தாக்குதல் நடத்தி பின்லேடனைக் கொல்லுமாறு உத்தரவிட்டேன். அதன்படி நடந்து விட்டது என வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில் ஒபாமா தெரிவித்தார். இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வு எனவும், இத்துடன் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முடிந்து விட்டதாக நாங்கள் கருதவில்லை. தொடர்ந்தும் அதில் நாம் ஈடுபடுவோம் எனவும் அவர் முழங்கியிருக்கின்றார்.

அமெரிக்கத் தாக்குதலால் பின்லேடன் கொல்லப்பட்டதாக முன்னரும் தகவல்கள் வெளியாகியிருந்தன. அப்போது அல்குவைதா அமைப்பினர் தங்கள் தலைவர் உயிருடன் இருப்பதாக அறிவித்து அமெரிக்காவின் செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்து வந்தனர் ஆனால், இம்முறை அவர்கள் மௌனமாவே இருந்து விட்டனர்.

பின்லேடன் கொல்லப்பட்ட இடத்திலிருந்து அவரது உடல் அமெரிக்கப் படையினரால் ஆப்கானுக்கு கொண்டு வரப்பட்டதாகவும், அங்கு மேற்கொள்ளப்பட்ட மரபணு பரிசோதனையின் போது பின்லேடனின் மரணம் சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் வந்த தகவலின் படி பின்லேடனின் உடல் கடலில் வீசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தரையில் அவரது உடலை அடக்கம் செய்தால் அது தீவிரவாதிகளின் நினைவிடமாக மாறிவிடும் என்பதாலேயே உடல் கடலில் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அமெரிக்க அதிகாரிகள் சிலர் பின்லேடனின் உடல் முஸ்லிம் முறைப்படி கடலில் அடக்கம் செய்யப்பட்டதாக தெரிவித்தனர்.

பின்லேடனை உயிருடன் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப் போவதாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்ஸும் இன்றைய ஜனாதிபதியான ஒபாமாவும் கூறியிருந்தனர்.

ஒசாமா பின்லேடன் உயிருடன் பிடிக்கப்பட்டாலோ அல்லது கொல்லப்பட்டாலோ ஐரோப்பாவில் தங்களால் மறைத்து வைக்கப்பட்டுள்ள அணுகுண்டை வெடிக்க வைப்போம் என அல்குவைதா அமைப்பு முன்னர் எச்சரித்திருந்தது. அல்குவைதாவின் மூத்த தலைவர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில் பின்லேடனுக்கு ஏதாவது நடந்தால் உடனடியாகவே தாம் அணுகுண்டை வெடிக்கச் செய்வோம் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடைபெறவில்லை.

ஆனால் அல்குவைதா அமைப்பு அமெரிக்கா மீது முன்னரை விடவும் எதிர்வரும் காலத்தில் அதிதீவிரமான தாக்குதல்களை நடத்தப்போவதாக எச்சரித்துள்ளது ●



**ஆப்கானிலுள்ள பின்லேடனின் தளங்கள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. அப்போது பில்கிளிங்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். ஏவுகணை பில்லேடனின் இடத்தை துல்லியமாக தாக்கிய போது அவர் அதிலிருந்த உயிர் தப்பினார். எப்படி என்றால் அவர் அத்தாக்குதல் நடைபெறுவதற்கு சற்றுமுன்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறியிருந்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு..



**பெரும்பாலான** அலுவலகங்களில் பணி நேரம் முழுக்க ஒரு கதிரையில் கட்டுண்டு கிடக்க வேண்டியதாகி விடுகிறது. இதனால் தேவையான உடல் உழைப்பு இல்லாமல் போவதால் டென்ஷன், முதுகு வலி, அஜீரணக் கோளாறு என்று வரிசை காட்டும் பிரச்சினைகள் ஏராளம். இவற்றைச் சரிசெய்து கொள்ள நமக்கு சில எளிய வழிகள் உள்ளன.

காலையில் அலுவலகத்துக்கு வந்து உங்கள் இடத்தில் அமர்ந்ததும், வேலையைத் தொடங்குவதற்கு முன் ஒரு நிமிடம் கண்களை மூடி அமர்ந்து மனதை 'ரிலாக்ஸ்' செய்து கொள்ளுங்கள். அதன் பிறகு வேலையைத் தொடங்கினால் புத்துணர்வுடன், உங்களின் காலை நேரப் பதற்றமும் குறையும்.

நீங்கள் உபயோகிக்கும் கதிரை உங்கள் உடல் வெப்பத்தை வெளியேற்றும் வகையில் துளைகள் உள்ளதாக இருக்க வேண்டும். அவ்வாறு துளைகள் இல்லாத 'குஷன்' கதிரைகளைப் பயன்படுத்தினால் , ஒரு டவலை நான்காக மடித்துப் போட்டு அதன் மீது அமருங்கள். சில மணி நேரங்களில் உங்கள் உடலின் வெப்பம் அதில் இறங்கிய பின் அதன் மடிப்பை மாற்றிப் போட்டு அமருங்கள்.

முதுகை வளைத்து, கூனிக்கொண்டு உட்காராமல், நன்கு நிமிர்ந்து கதிரையில் முதுகுபடும்படி உட்காருங்கள்.

கால்களை தரையில் வைப்பதைவிட, சற்று உயரமான ஒரு 'சப்போர்ட்' கொடுத்து வைத்துக் கொண்டால், முதுகுவலி ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

பல மணி நேரம் தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதால், தசைபிடிப்பு ஏற்படும். எனவே அவ்வப்போது கை, கால்களை நீட்டி மடக்குவது, தலையை நாலாபுறங்களிலும் சாய்த்துக் கொள்வது போன்ற செயல்களைச் செய்யுங்கள். கூடவே தண்ணீர் குடிப்பது, முகத்தைக் கழுவுவது, அருகில் சிறிது தூரம் நடந்து விட்டு வருவது... என்று ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை உடலுக்கு ஏதாவது இயக்கம் கொடுங்கள். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கம் இல்லை என்றால் குனிந்து கைகளால் பாதத்தை தொடுவது, இடுப்பில் கை வைத்துக் கொண்டு பின்புறம் வளைவது, இடது மற்றும் வலது புறம் சாய்வது போன்ற எளிமையான பயிற்சிகளை சில நிமிடங்கள் செய்யுங்கள். (முதுகு மற்றும் இடுப்பு வலி இருப்பவர்கள் மருத்துவரை ஆலோசித்த பிறகே இவற்றைச் செய்ய வேண்டும்) இதனால் உடலில் ரத்த ஓட்டம் சீராக இருக்கும். தசைப் பிடிப்பும் விலகும்.

கணினி முன் வேலை செய்யும் போது எப்போதும் திரையையே பார்த்துக்கொண்டிருப்பதால் தான் கண்களில் எரிச்சல் ஏற்படும். இதைத் தவிர்க்க அயர்ச்சியாகத் தோன்றும்போதெல்லாம் சில விநாடிகள் கண்களை கையால் மூடி, அந்தக் கையின் மேல் மற்றொரு கையையும் வைத்து முடிக்கொள்ளுங்கள். இதனால் கண்களுக்கு சில நொடிகள் அடர்ந்த இருட்டும் கிடைக்கும். இது, அதிக ஒளியினால் ஏற்படும் சோர்வை விலக்கும். தவிர, கண்களை மேலும் கீழுமாக, முன்னும் பின்னுமாக சுழற்றுகிற எளிமையான பயிற்சிகளையும் செய்யலாம். 'அன்ட்டி ரேடியேஷன்' கண்ணாடியை கணினி திரையில் பொருத்துவதும் ஒளியினால் கண்கள் எரிச்சலடைவதைத் தடுக்கும்.

உடல் உழைப்புக் குறைவாக இருப்பதால் மாலை நேர சிற்றுண்டிக்கு எண்ணெய் பதார்த்தங்களைத் தவிர்ப்பது, அஜீரணக் கோளாறுகளைத் தடுக்கும். அதற்கு பதில் அவல், புட்டு, 'சாண்ட்விச்', பழக்கலவை, சுண்டல், முளை கட்டிய பயிறு, பொரி, மசாலாபொரி, நிலக்கடலை, பட்டாணி..... போன்றவற்றை சாப்பிட்டால் எளிதில் ஜீரணமாவதுடன் அதில் உள்ள விட்டமின்கள் உடலுக்கும் அதிக சக்தி கொடுக்கும்.

இரவு வெகு நேரம் தூங்காமல் கண் விழித்து வேலை செய்வதாலும் அஜீரணக் கோளாறு ஏற்படும். இதனால் சில மறுநாள் காலை மலம் கழிக்க முடியாமல் சிரமப்படுவார்கள். இதைத் தவிர்க்க, மாலை நேரத்தில் சாப்பிடலாம். இதனால் அஜீரண கோளாறுகள் வெகுவாகக் குறைவதுடன் உடலின் வெப்பநிலையும் சீராக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2040 ஆம் ஆண்டில்

## இறந்தவர்கள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்..?





விஞ்ஞானமும், மருத்துவமும் வளர்ச்சி பெற்று வரும் நிலையில், அதாவது இன்னும் 20 ஆண்டுகளுக்குள் மரணத்தை விஞ்ஞானிகள் வென்று விடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அப்படி ஒரு நிலை உருவாகும் போது பதப்படுத்தப்பட்டுள்ள உடலுக்கும் உயிர் கிடைக்கும் என்று நம்புகிறவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். செத்தவர்களை பிழைக்க வைக்கும் இந்த ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான அதிசய தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித வாழ்வு நிலை இல்லாதது. மனிதனின் பிறப்பையும், இறப்பையும் யாராலும் நிச்சயமாக வெல்ல முடியாது.

வயது அதிகமாக அதிகமாக மனிதனுக்கு உடல் தளர்ந்து முதுமை ஏற்படும். இது தவிர பழக்க வழக்கங்கள் மற்றும் நோய் காரணமாக உடல் ,உறுப்புகள் பாதிக்கப்பட்டு மரணம் அல்லது உடல் உறுப்புகள் சேதம் அடைதல் போன்ற ஆபத்துகளும் ஏற்படும்.

மனித உயிர்களை பறிக்கும் நோய்களில் குறிப்பிடத்தக்கது இதய நோயாகும். இந்த நோய்க்கு சத்திரசிகிச்சை மற்றும் மருந்துகள் இருந்தாலும் சில நேரங்களில் அவை பலன் தருவதில்லை.

அது போன்ற நிலையில் இருந்து மனிதர்களை காப்பாற்ற உருவாக்கப்பட்டுள்ளது தான் கிரையோஜெனிக் முறை. இயற்கையாக மரணம் அடைந்த பின்னர் ஒருவரது உடலை குளிர் நிலையில் பதப்படுத்தி வைப்பது தான் கிரையோஜெனிக் முறையாகும்.

வருங்காலத்தில் இறந்தவர்களை பிழைக்க வைக்கும் ரகசியங்களை கண்டுபிடிக்கும் போது இந்த உடல்களை எடுத்து அவற்றுக்கு உயிர் கொடுக்க முடியும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.


இவ்வேளையில் எப்படி பிழைக்க வைக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி







ஒருவருக்கு மரணம் என்பது பல வழிகளில் ஏற்படலாம். இருப்பினும் பொதுவாக ஒருவரது மரணம் என்பது இருதய துடிப்பு நின்று போவது தான். இருதயம் செயல்படுவது நின்று போன பிறகு உடலின் மற்ற உறுப்புகளுக்கு இரத்தம் செல்வது தடைப்படுகிறது. இதன் காரணமாக முதலில் இருதயமும் பின்னர் அதைத் தொடர்ந்து உடலின் பிற பாகங்களும் செயல் இழக்கின்றன. இருதயம் நின்றுபோன பிறகும் சில மணி நேரங்களுக்கு மூளையின் முக்கிய திசுக்கள் உயிரோடு இருக்கும். அந்த மூளைத் திசுக்களை பாதுகாப்பது தான் இந்த கிரையோஜெனிக் முறையின் முக்கிய அம்சமாகும். இந்த தொழில் நுட்பத்தின் படி ஒருவர் மரணம் அடைந்ததும் தனது உடலைப் பாதுகாக்க விரும்பினால் அதை செய்து கொடுக்க பல நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ளன. இதில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த நிறுவனத்தினர் தங்களிடம் பதிவு செய்தவர்கள் இயற்கையாக மரணம் அடைந்த தகவலை அறிந்ததும் உடனே அவரது வீட்டுக்கு விரைந்து சென்று உடலை தங்களது அலுவலகத்துக்கு கொண்டு வருகிறார்கள். அங்கு அந்த உடலின் திசுக்கள் மற்றும் பிறபாகங்களில் உள்ள தண்ணீரை அகற்றும் பணி முதலில் நடக்கிறது. திசுக்களில் தண்ணீர் இருந்தால் அதன் காரணமாக அந்த உடல் சீக்கிரம் அழுகி விடும். எனவே, முதலில் உடலில் உள்ள தண்ணீர் அகற்றும் பணி நடைபெறுகிறது. பின்னர் அந்த உடலுக்குள் சில இரசாயன கலவைகளை செலுத்துகிறார்கள். இதன் மூலம் உடல் குளிர்விக்கப்படும் போது உறை நிலையில் பனிக்கட்டியாக மாறுவதில்லை. மேலும், சாதாரண நிலைக்கு மீண்டும் உடலை கொண்டு வரும்போது அது எந்த மாற்றமும் இன்றி பழயை நிலையை அடைய இந்த இரசாயன கலவை உதவுகிறது.

உடலை பாடம் செய்த பின்னர் அதை குளிர வைக்கும் பணி நடைபெறுகிறது. பின்னர் அந்த உடலை ஒரு குளிர் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கின்றனர்.

இந்த முறைப்படி மனித உடல் மைனஸ் 196 டிகிரி செல்சியஸ் அளவுக்கு உடல் குளிர்விக்கப்பட்டாலும் அது பனிக்கட்டி போல உறை நிலையை அடைவதில்லை. கிரையோஜெனிக் முறைப்படி உடலைப் பதப்படுத்த பலர் ஆர்வம் காட்டினாலும் இது வரை யாரையும் உயிர்ப்பிக்கும் சாதனை நடக்கவில்லை. 'நானோ டெக்னோலஜி' எனப்படும் நுண்ணுயிர் தொழில் நுட்பம் மூலம் இறந்தவர்களை பிழைக்க வைக்கும் காலம் விரைவில் வரும் என்பது கனவாக இருக்கிறது.

இந்த தொழில் நுட்பம் சேதம் அடைந்த மனித திசுக்களை புதுப்பிக்க முடியும் என்ற அளவுக்கு இப்போதைய ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இது தொடருமானால் 2040 ஆம் ஆண்டில் இறந்தவரை பிழைக்க வைக்கும் அதிசயம் நடக்கும் என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வியாசன்

**சுமார்** ஆறுலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகக் கூறப்படும் மாயன் நாகரீகத்தைச் சேர்ந்த மக்கள் உலகின் ஆயுள் காலத்தை கணித்து வைத்துள்ளார்களாம். இன்றைய கவுதமாலாதான் மாயன் நாகரீகத்து மக்கள் வாழ்ந்த இடமெனக் கருதப்படுகின்றது.


2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி வரை உலகின் தட்ப வெப்ப நிலை மாறுதல்களால் என்னென்ன பேரழிவுகள் ஏற்படும் என்பதையும், அவர்கள் அப்போதே கணித்துள்ளார்களாம். சுனாமி, கொள்ளை நோய்கள் போன்றவை எல்லாம் இந்த அழிவுகளின் ஒரு பகுதிதான் என அவர்கள் தங்கள் கணிப்பில் குறிப்பிட்டுள்ளார்களாம்.












2012ம் ஆண்டின் பின்னர் என்ன நடக்கும் என்பது பற்றிய எவ்வித குறிப்புக்களும் மாயன் நாகரீக ஆதாரங்களில் இல்லையாம். அதனால் பூமியின் ஆயுள் இதுவரைக்கும் என்பதை வைத்துக் கொண்டு சிலருக்கு திகிலூட்டும், சிலருக்கு சுவாரஸ்யத்தைத் தரும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஹொலிவூட்டின் திரைப்பட இயக்குநர்கள் உலகின் அழிவைக் கற்பனை செய்து பிரம்மாண்டமான திரைப்படங்களைத் தயாரித்துள்ளனர். இதனால் கோடிக்கணக்கான இலாபத்தை அவர்கள் சம்பாதித்துள்ளனர்.

'இன்டிபெண்டன்ஸ் டே', 'டே ஆப்ரர் ருமாறோ' போன்ற பிரமாண்டமான திரைப்படங்களை இயக்கிய றோலன்ட்எம்மெரிச் உலக அழிவைக் கற்பனை செய்து பார்த்தார். அந்தக் கற்பனையில் பிறந்ததுதான் '2012' என்ற திரைப்படம். இது 'ருத்ரம்' என்ற பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டும் உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாளில் பூகம்பமும், சுனாமியும், ஏற்பட்டால் என்ன நடக்கும் என்பதை கற்பனையில் கொண்டுவந்து காட்சிகளைக் கோர்த்து 1200 கோடி செலவில் படத்தை எடுத்திருக்கிறார்கள்.

படத்தின் இயக்குநரின் கற்பனையில் பெரிய பெரிய நகரங்கள் எல்லாம் இடிந்து தரைமட்டமாகின்றன. கட்டிடங்கள் எல்லாம் மரங்கள் போல் வேரோடு சாய்ந்து விழுகின்றன. விண்கற்கள் பூமியை நோக்கி வந்து விழுந்து தீப்பற்றுகின்றது. இந்த அழிவுகளுக்கு மத்தியில் ஒரு குடும்பம் விமானத்தில் தப்பிச் செல்கிறது.

இப்படம் கடந்த வருடம் வெளியானது. இப்படத்தின் தகவல்கள் சற்றுப் பிந்தியதாயினும் அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி, சுனாமி ஆகியவற்றால் ஏற்பட்ட அழிவுகளின் காட்சிகள் இப்படத்தில் வரும் காட்சிகளை ஒத்ததாகவே இருக்கின்றன. '2012' திரைப்படத்தைப் பார்த்துவிட்டு ஜப்பான் பேரழிவுகளைத் தொலைக்காட்சிகளில் பார்த்தவர்களுக்கு ஒரு வித அச்சம் தொற்றிக்கொண்டது.

பூமி அதிர்வினால் ஜப்பானில் கட்டிடங்கள் சாய்ந்து விழுவதையும், சுனாமிப் பேரழிவுகளால் நகரங்கள், குடியிருப்புக்கள் அள்ளப்பட்டு மூடப்படும் காட்சிகளும், உலக அழிவின் ஓர் ஒத்திகை தான் இதுவா என எண்ணத் தொன்றுகிறது.

இதேவேளை உலகில் அடிக்கடி இடம்பெறும் பூகம்பம், திடீர் திடீரென வந்து அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி, பூமியில் அதிகரித்துவரும் வெப்பம் என்பன இவ்வுலகில் ஏற்பட்டுள்ள வழமைக்கு மாறான நிகழ்வுகளாகவுள்ளன. இவையும் உலக அழிவை நோக்கியதா என்ற அச்சத்தை தோற்றுவிக்கிறது.

எனினும், பூமிக்கு ஏற்படும் எல்லாச் சிக்கல்களிலிருந்தும் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றல் அதற்கு உள்ளது என்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பூமியின் அழிவுநாள் பற்றிய சில கட்டுக் கதைகளும், விஞ்ஞானத் தகவல்களும் வெளிவந்தாலும், '2012' திரைப்படத்தில் வருவதைப் போல் பூமி மொத்தமாக அழிந்து விடாது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எது எப்படியோ, பூகம்பமும், சுனாமியும், அண்மைக் காலங்களில் ஏற்படுத்தியுள்ள பேரழிவுகள் எதிர்காலத்திலும் பூமியின் பல பாகங்களில் ஏற்படலாம். இந்தப் பூகம்பமும் சுனாமியும் மேலும் பல மடங்கு சக்தி மிக்கதாக வெளிக்கிளம்பும் போது உலகின் பல நாடுகளில் பேரழிவுகள் நிகழலாம் என்கிற சந்தேகமும், அச்சமும் மக்கள் மனங்களில் ஏற்படத்தான் செய்கின்றது ●



# ஜப்பான் பூகம்பமும், சுனாமியும், உலக அழிவுக்கான ஓர் ஒத்திகையா?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வைதேகி காத்திருக்கிறாள்

அன்று இரவு முழுவதும் வைதேகியால் தூங்கவே முடியவில்லை. விடிந்தால் ஆனந்த் போய்விடுவான் என்ற ஆதங்கம் அவளுக்கு. திருமணமாகி ஒரு கிழமை கூட ஆகவில்லை. அதற்குள் தன் கணவன் தன்னைவிட்டுச் செல்வதை நினைக்கும் போது அவளால் எப்படித்தான் தூங்க முடியும். தூக்கமின்றித் தவித்த கண்களிற்கு ஆறுதலளிக்கும் வகையில் வெளியே வந்தவள் முற்றத்தில் நின்று இருண்டு கிடந்த வானத்தை வெறித்துப் பார்த்தபடி மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சில நிகழ்வுகளைக் கற்பனையில் நினைத்த போது ஓவெனக் கத்த வேண்டும் போல் இருந்தது.

காலை விடிந்ததும் ஆனந்த் எழுந்து வைதேகியைப்பற்றி சற்றும் கவலையில்லாமல் புறப்படுவதற்குத் தயாரானான். ஆனந்த் குளித்துவிட்டுச் சாப்பிட வந்தபோது வைதேகி அவனருகில் வந்தமர்ந்து அன்புடன் உணவைப் பாமாறியபடியே "என்னங்க..." என்று இழுத்தவள் மீதியைச் சொல்ல முடியாமல் திண்டாடினாள்.

"என்ன வைதேகி கொஞ்சநாளைக்கு இப்படித்தான் இருக்கும் பிறகு எல்லாம் சரியாயிடும். நீ ஒண்டுக்கும் யோசிக்காமல் என்னை வழியனுப்பிவை. நான் போய் ஆறு மாசத்திலை உன்னைக் கூப்பிடுவன்" என அவள் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளி அவளைச் சமாதானப்படுத்தினான் ஆனந்த். வைதேகியால் ஒன்றுமேபேச முடியவில்லை. அன்று காலையே ஆனந்த் எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

துன்னாலை என்ற அழகிய கிராமத்திலே கந்தையாவிற்கும் கனகம்மாவிற்கும் மூத்த பிள்ளையாகப் பிறந்தவள் தான் வைதேகி. இவளுக்குக் கீழே நான்கு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். வைதேகி க.பொ.த உயர்தரம் வரையும் படித்திருந்தாள். கந்தையா ஐந்து பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கஸ்ரப்பட்டார். அவர் ஒரு கூலித் தொழிலாளியாக இருந்தாலும் அக்கிராமத்திலே அவருக்கு கஸ்ரத்திலும் கௌரவமாக வாழ்பவன் என்ற நற்பெயர் கிடைத்திருந்தது. கந்தையாவைப் போலவே அவருடைய ஐந்து பிள்ளைகளும் வாழ்ந்து வந்தனர். இதே வேளை. அழகிலும் அடக்கத்திலும் வைதேகிக்கு நிகராக அக்கிராமத்திலே யாரும் இருக்கவில்லை.

அன்றொரு நாள் அக்கிராமத்திலே நடைபெற்ற கோயில் திருவிழாவிற்கு வைதேகி தன் தங்கையுடன் சென்றிருந்தாள். கோயிலிலே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் கூட்டம் நிறைந்து வழிந்தாலும் அழகு தேவதையாக வந்திருந்த வைதேகியை இரண்டு கண்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. அதை வைதேகி பொருட்படுத்தவில்லை. திருவிழா முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில்

"அக்கா உங்களை யாரோ கூப்பிடனம்" தங்கையின் குரல் கேட்டுத் திரும்பினாள் வைதேகி. தன்னை வைத்தகண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் தான் அழைத்தான். அருகில் வந்து "ஹலோ உங்கடை பேரென்ன?" எனக் கேட்டான். வைதேகி முறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டாள்.



"அக்கா உங்களை யாரோ கூப்பிடனம்" தங்கையின் குரல் கேட்டுத் திரும்பினாள் வைதேகி. தன்னை வைத்தகண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் தான் அழைத்தான். அருகில் வந்து "ஹலோ உங்கடை பேரென்ன?"

வீட்டுக்குச் சென்றவள் இதைப் பற்றி எதுவுமே கூறவில்லை ஆனாலும், அன்று முழுக்க அந்த இளைஞனின் ஞாபகம்தான் அவளுக்கு.

மறுநாள் காலை வீட்டுவாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்டு கேற்றடிக்குச் சென்றாள் வைதேகி. கோயிலில் வைத்த கண் வாங்காமல் பார்த்த அதே இளைஞன் கேற்றடியில் நின்றிருந்தான். படாரென கேற்றைச் சாத்திவிட்டு வந்துவிட்டாள். இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மிகவும் ஆறுதலாக கேற்றைத் திறந்து வந்த அந்த இளைஞனை வைதேகியின் தாய் கண்டுவிட்டாள்.

"வாங்கோ தம்பி என்ன வேணும் யாரையாவது தேடுறியளோ?" எனக் கேட்ட கனகம்மாவிடம் "உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும்" என்றான். அவனைப் புரியாமல் பார்த்தவள் உள்ளே கூட்டிச் சென்று சாய்மனைக் கதிரையில் உட்கார வைத்தாள். அந்தநேரம் கந்தையா இல்லாததால் "இருங்கோ தம்பி இவர் கடைக்குப் போனவர் இப்ப வந்திடுவார்" என்று கூறிவிட்டு அடுக்களைப் பக்கமாகச் சென்றுவிட்டாள். கனகம்மா தேனீருடன் வரவும் கந்தையா கடையால் வரவும் சரியாக இருந்தது.

"இஞ்சருங்கோ உங்களைத்தான். தம்பி ஏதோ உங்களோடை கதைக்க வேணுமாம்" என்று கனகம் சொல்லவே கந்தையா திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டார்.

அந்த இளைஞன் தான் வந்த விடயத்தை மிகவும் துணிச்சலுடனும் சாதுரியமாகவும் கூறத் தொடங்கினான்.

"ஐயா நான் உங்கட மகளை விரும்புறன்" என்றவன் பணிவாக "எனது பெயர் ஆனந்த். நான் கனடாவில் நிரந்தர வதிவுரிமைபெற்றவன். எனது பெற்றோர் பக்கத்துக் கிராமத்தில்தான் இருக்கினம் அவர்களைப் பார்த்திட்டுப் போகலாம் எண்டுதான் வந்தனான். அதோட கல்யாண விசயமாயும்.." என்று இழுத்தவன் "உங்கடை மகளைச் செய்து தந்தா கலங்காமல் வைச்சிருப்பன் இதுக்கு மேலயும் ஏதும் தேவைப்பட்டால் எங்கடை வீட்டுக்கு வந்து கதைக்கலாம்" எனக்கூறி தனது வீட்டு முகவரியையும் கொடுத்துவிட்டு விடைபெற்றுச் சென்று விட்டான்.

ஆனந்தின் குடும்பம் மிகவும் வசதியானது பருத்தித்துறையில் சொந்த வீட்டுடன் காணி என்று ஏகப்பட்ட சொத்து. ஆனந்துக்கு இரண்டு தம்பிமார் மட்டுமே. பதினான்கு வயதில் வெளிநாடு சென்றவன் பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் திருமணத்துக்காக பதினான்கு வருடங்களின் பின்னர் சொந்த இடத்துக்கு வந்திருக்கிறான். நல்ல கட்டுமஸ்தான உடல்வாகை கொண்ட ஆனந்தை ஒரு ஆணழகன் என்று கூடச் சொல்லிவிடலாம். எல்லா விதத்திலும் வைதேகிக்குப் பொருத்தமானவனாகவே இருந்தான்.

வெளிநாடு என்றவுடன் வைதேகிக்கு சற்றும் விருப்பமில்லை. இருந்தாலும் பெற்றோர் சொற்படி கேட்க வேண்டுமென்று நினைத்தாள். இதைவிட வெளிநாட்டு மாப்பிள்ளைக்குரிய சீதனமும் பெற்றோரிடம் இருக்கவில்லை. ஆனால் தாய் கனகம்மாவோ "இஞ்சாருங்கோப்பா பெடியனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் நல்ல பொடியன் போல கிடக்கு. அதைவிட குடும்பமும் வசதியானது போல தெரியுது. கனடாவாமல்லே...''

கந்தையாவிடம் கண்களை அகல விரித்துக் கொண்டாள் கன்கம். கந்தையா அமைதியாக "இஞ் சாரப்பா வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டாச் சும் மாவே எவ்வளவு சீதனம் கேட்கப் போறாங்களோ.." என பெருமூச்சு விட்டுக்கொண்டார். அதற்குக் கனகம் "நீங்க இங்கயிருந்து கற்பனை பண்ணாம பெடியன்ர வீட்டுக்குப் போய் கதைச்சுப் பாருங்கோ வன்'' என்று ஒரேயடியாகக் கூறிவிட்டாள்.

கந்தையா ஆனந்தின் வீட்டை ஒருவாறு கண்டுபிடித்து அங்கு சென்றபோது அவர்கள் வீட்டில் அமோக வரவேற்பு இருந்தது. கந்தையா ஆனந்த் - வைதேகியின் திருமண விடயம் பற்றிக் கதைத்தபோது ஆனந்தின் அப்பா "என்ர மகனுக்கு உங்கடை மகளை நல்லா பிடிச்சுப்போட்டு தாம் செய்தா உங்கடை மகளைத் தான் செய்யிறது. இல்லாட்டில் கல்யாணமே வேண்டாமெண் டெல்லோ சொல்லிப்போட்டான். அவனும் கனடாவிலிருந்து பதினாலு வருசமாக் கஸ்ரப்பட்டு வந்திருக்கி றான். அதாலை அவன்ர விருப்பப் படியே செய்யட்டும்'' என்றார்.

உடனே ஆனந்தின் அம்மா "நீங் கள் சீதமனமெண்டு ஒண்டும் கொடுக்க வேண்டாம் உங்கடை பிள் ளைக்கெண்டு சந்தோசமா இரண்டு லட்சம் காசைக் குடுங்கோவன். வேற ஒண்டும் நாங்க எதிர்பாக்கேல்ல'' என்றாள். இதைக் கேட்ட கந்தையா வுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. ஒருவாறு அவர்களிடமி ருந்து விடைபெற்றார்.

மறுநாள் இது பற்றி பக்கத்துவிட்டு மாணிக்கத் திடம் கேட்டபோது "இஞ்சபார் கந்தையா இது வலிய வந்த சம்மந்தம் அதோட கனடா மாப் பிள்ளை. இனி இப்பிடி ஒரு சம்மந்தம் வராது ஏதோ உன்னட்டை கிடக்கிறதைக் குடுத்துச் செய்து வை'' என்று கூறிவிட்டார். இதுபற்றி வைதேகியிடம் கேட்டபோது "உங்கட விருப்பம்தான் என் விருப் பம் அப்பா'' என்று கூறி விட்டாள்.

கந்தையா ஊரெல்லாம் கடன்பட்டு மூன்று லட்சம் பணம் சேர்த்து ஆனந்துக்கும் வைதேகிக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார். திருமணம் முடித்து ஒரு கிழமைகூட ஆகவில்லை ஆனந்த் வைதேகியை



" என்ன வைதேகி கொஞ்சநாளைக்கு இப்படித்தான் இருக்கும் பிறகு எல்லாம் சரியாயிடும். நீ ஒண்டுக்கு யோசிக்காமல் என்னை வழியனுப்பிவை. நான் போய் ஆறு மாசத்திலை உன்னைக் கூப்பிடுவன் "

அவள் பெற்றோருடன் விட்டுவிட்டு கனடாவிற்குச் சென்றுவிட்டான்.

ஆனந்த் போய் மூன்று மாதங்களின் பிறகு ஒரேயொரு கடிதமேவை தேகிக்கு வந்தது. கடிதம் கண்ட வைதேகியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இரவிரவாக பதிலெழுதி மறுநாட்காலையிலேயே ஆனந்திற்கு அனுப்பிவிட்டாள். ஆனால் அதன்பிறகு அவளுக்கு ஏமாற்றமே பதிலாக அமையுமென அவள் எதிர்பார்க்கவில்லை.

ஆனந்த் போய் இரு வருடங்கள் ஆகிவிட்டன. வைதேகி ஒரு குழந்தைக்கும் தாயாகிவிட்டாள். ஆனால், ஆனந்தைப்பற்றி எதுவுமேதெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டு கலா அக்காவின் கணவர் கனடா வில் இருப்பதை அறிந்து அவரு டன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் கணவனைப் பற்றி விசாரித்தபோது மறைக்கப்பட்டி ருந்த உண்மைகள் பல வெளிவந்தன. ஆனந்த் முதலே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்றும் தற்போது வேறொரு பெண் ணுடன் தொடர்பு இருப்பதாகவும், தான் வேலை செய்யும் ஹோட்டலி லேயே ஆனந்த் வேலை செய்வதாக வும் கூறியதைக் கேட்டு வைதேகி திகைத்தாள். இதையறிந்த கந்தையா செய்வதறியாது துடித்தார்.

ஆனந்தின் பெற்றோரிடம் இது பற்றிக் கேட்டபோது அவர்கள் மௌனமாயிருந்தனர். தன் தலை விதியை நொந்தவண்ணம் வீடு வந்த கந்தையா, வீட்டு வாசலில் கடன் காரரும், வீட்டு வாடகைப் பணத்திற் காக வீட்டு உரிமையாளரும் நிற்ப தைக் கண்டதும் அவ்விடத்திலேயே விழுந்து விட்டார். அன்று விழுந்தவர் திரும்ப எழும்பவில்லை.

கந்தையா இறந்து மூன்று நாட்களாகிவிட்டன. கனகம்மா செய்வதறியாது திகைத்தாள். தன் நான்கு பிள்ளைகளையும் எப்படிக் கரை சேர்ப்பது என்று கலங்கினாள். வைதேகி ஒரு மூலையில் தன் குழந் தையை அணைத்தபடி அழுது கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது பெற்ற வயிறு பற்றி எரிந்தது. கனகம்மா வெளியில் வந்து வானத்தை வெறித்துப் பார்த்தபடி முற்றத்திலே குந்தி விட்டாள்.

ஆனாலும், தன் ஆனந்த் அப்படிச் செய்திருப் பான் என்பதை வைதேகியால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. எப்போதாவது தன்னைத் தேடி ஆனந்த் வருவான் என்ற நம்பிக்கையில் வைதேகி காத்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பெண் அவளது கணவனை வைத்தியரிடம் அவசரமாக அழைத்துச் சென்றாள்.



"டொக்ரர் இவரது வாய்க்குள் ஒரு எலி போய்ட்டுது அதை வெளியே எடுக்க வேணும்"

"எலி எப்படி வாய்க்குள் போனது?"

"அவர் குடிக்கிறவர். குடிச்சால் வாயை பெரிசா திறந்துகொண்டுதான் நித்திரை கொள்ளுவார். அப்போது ஒரு எலி வாய் உள்ளுக்குப் போயிட்டுது. எவ்வளவு குடிக்கிறாரோ அந்தளவுக்கு வாயைப் பெரிசா திறப்பார். அப்படியொரு பழக்கம் அவருக்கு"

"சரி எலிபோன அன்டைக்கு எவ்வளவு குடித்திருந்தார்?"

"ஒரு போத்தல் சாராயம்"

"ஓகே. இன்றைக்கு இரண்டு போத்தல் குடிக்கச் சொல்லுங்கோ. அவர் வாயை இரண்டு மடங்கு பெரிசா திறப்பார். அப்போது வாய்க்குள் பூனையொன்று போகக்கூடிய வசதியிருக்கும். அந்தப் புனை அந்த எலியைப் பிடித்துக்கொண்டு வெளியில் வந்திரும்"




# PAKYA

## INSTITUTE OF ENGLISH

*தரம் 06-11 வரையான மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.*

**SPECIAL ENGLISH CLASSES ARE BEING CONDUCTED FOR GRADE 6-11**

***FOR CONTACTS..***
021 222 1917, 0773276380
No.106A, K.K.S. ROAD, KOKUVIL





# பாக்யா

## இசைப்பயிலகம்

இசை, இசை வாத்திய வகுப்புகள் நடைபெறுகின்றன.
மிருதங்கம், ஓகன், வயலின், சங்கீதம், புல்லாங்குழல், சித்திரம்

தொடர்புகளுக்கு:
021 321 1270; 0750415858





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜெகன்



தனிமையில் இருந்த அவளுக்கு புகைப்படப்பிடிப்பாளரான மார்ட்டின் என்பவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அவளது அறியாமையைப் பயன்படுத்தி அவளை நிர்வாணமாக படங்கள் பிடித்து பல்வேறு சஞ்சிகைகளுக்கு விற்று பணம் தேடிக்கொண்டான் அவன். யுத்தமுனையில் நின்ற கணவன் ஒரு நாள் சஞ்சிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த போது மனைவியான மர்லினின் நிர்வாணப் படத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றான்.



**1950** தொடக்கம் 1960 வரையிலான காலப் பகுதியில் உலகெங்கும் வாழ்ந்த இளைஞர்கள் தொடக்கம் முதியோர் வரையிலான கோடிக் கணக்கானோர் நெஞ்சங்களில் கனவுலக தேவதையாக வலம் வந்தவர்தான் மர்லின்மன்றோ. வனப்பான உடற்கட்டு, காந்த விழிகள், நெற்றியில் தவழ்ந்து விழும் சுருளான கேசம். இவற்றால் கவரப் படாதவர்கள் எவருமில்லை. அவளது கடைக்கண் பார்வை கிடைக்காதா என பெரும் கோடீஸ்வரர்களும் தவமிருந்தனர். அந்தளவுக்கு அழகெனும் பொக்கிசம் அவளுக்கு வாய்கிருந்தது.

சர்வதேசத் திரைப்படங்களில் சிறந்த நடிகையாக, அத்துடன் மொடல் அழகி, பாடகி எனப் பல்துறைகளில் மர்லின் சிறந்து விளங்கினாள். பணமும் புகழும் தேவைக்கு அதிகமாகவே அவள் காலடியில் கொட்டிக் கிடந்தது.

எனினும், மர்லின் 05.08.1962 அன்று அதிகாலை லொஸ்ஏஞ்சல்ஸிலுள்ள அவளது வீட்டில் மர்மமான முறையில், ஓர் அநாதை போல் மரணமாகி கிடந்தாள். எவ்வித நோயோ, நிதிநெருக்கடியோ இல்லாத நிலையில் வாழ்ந்து வந்த பேரழகியின் திடீர் மரணம் உலகம் முழுவதுமிருந்த அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கனவு நாயகி

# மர்லின்மன்றோவின் மறுபக்கம்

ரசிகர்களை உலுக்கியது.

புலன் விசாரணைகளின் பின்னர் அளவுக்கு அதிக மாக நித்திரைக் குழிசைகளை உட்கொண்டதால் ஏற்பட்ட தற்கொலை மரணம் எனக் கூறப்பட்டது. ஆனால், இதனை உலகம் நம்பவில்லை. மர்லின்மன் றோவின் மரணம் சந்தேகத்துக்குரியதாகவே பார்க்கப்பட்டது.

அழகிய ரோஜாவில் முள்ளிருப்பதைப் போல பேரழகியான மர்லின்மன்றோவின் வாழக்கையிலும் அந்தரங்கங்கள், துயரங்கள், பாசப்பிணைப்புகள், ஏக்கங்கள், பிரிவுகள், குமுறல்கள், எல்லாமே புதையுண்டு கிடந்தன.

மர்லின்மன்றோ என ஆசையுடன் அழைக்கப்படும் அவளின் இயற்பெயர் நோர்மா ஜீன் என்பதாகும். இவள் கலிபோர்னியா மாநிலத்தின் லொஸ்ஏஞ்சல்ஸில் *01.06.1926*இல் பிறந்தாள். தாயாரின் பெயர் கிளாடி பேர்ள் பேக்கா இவளது தந்தையான கிளாடி அவள் காப்பத்திலிருந்த போதே மனைவியை விட்டு பிரிந்து சென்று விட்டார். மர்லின்மன்றோவின் தாய் ஒரு மனநோயாளி. அதன் காரணமாகவே மர்லின் மன்றோவின் தந்தை குடும்பத்தைப் பிரிந்து செல்ல நேரிட்டது. அதன்பின் மர்லின்மன்றோ பிறந்து வளர்ந்து தனது தந்தையின் முகத்தை ஒரு தடவையேனும் காண சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தந்தை இறந்த வேளையிலும் அவர் மேலிருந்த வெறுப்பு காரணமாக அவரது மரணவீட்டிற்கும் அவள் செல்லவில்லை.

வறுமையின் தாக்கம் காரணமாகவும், மன நோயாளியாக இருந்த காரணத்தினாலும் மர்லின் மன்றோவின் தாய் அவளை ஏழு வயதிலேயே அயலவரான அல்போட் பொலன்டா தம்பதியினரிடம் பராமரிப்பிற்காக ஒப்படைத்தாள்.

பின்னர் மனநோயாளியான தாய் மீண்டும் தனது மகளை தன்னிடம் ஒப்படைக்குமாறு அடிக்கடி அவர்களிடம் நச்சரிக்கத் தொடங்கினாள். அதனால் அவளை மீண்டும் தாயாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் மர்லின்மன்றோவின் தாயாருக்கு மனநோயின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையிலேயே தொடர்ந்து தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இதனால், இன்னொரு அயலவரான 42 வயது நிரம்பிய கிறேஸ் என்பவர் மர்லின்மன்றோவின் நிர்க்கதியான நிலையை உணர்ந்து அவளது பாதுகாவலராக அவளைப் பொறுப்பேற்றார். அப்போது மர்லினுக்கு வயது ஒன்பதாகிவிட்டது.

அதன் பின்னர்தான் அவளது வாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றின. பாதுகாவலரான கிறேஸ் திருமணம் முடித்ததால் அவளை அநாதை இல்லமொன்றில் சேர்த்து விட்டார். அங்கு அவள் கல்வி கற்கும் வேளைகளில் அங்குள்ளவர்கள் தேவையற்ற ஆசைகளையும், சினிமா மோகத்தையும் அவள் மனதில் தூண்டிவிட்டனர். அந்த ஆசைகளுக்கு மர்லின் மெள்ள மெள்ள அடிமையானாள். அதற்கு ஏற்றவாறு தன்னை அழகு படுத்துவதிலும், பிறரைக் கவர்வதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினாள்.

காலங்கள் உருண்டோட, மர்லின் 1942ஆம் ஆண்டில் அதாவது அவளது 16வது வயதில் அவ்வூரைச் சேர்ந்த ஜேம்ஸ் டவ்கெட்டி என்பவரை திருமணம் முடித்தாள். அந்நேரத்தில் - முதலாவது உலகப் போர் மூளும் நிலையில் 1943 இல் அவளது கணவன் கடற்படையில் இணைந்து க்டமைநிமித்தம் வெளிநாடு ஒன்றிற்குப் பயணமானான்.



தனிமையில் இருந்த அவளுக்கு புகைப்படப் பிடிப்பாளரான மார்ட்டின் என்பவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அவளது அறியாமையைப் பயன்படுத்தி அவளை நிர்வாணமாக படங்கள் பிடித்து பல்வேறு சஞ்சிகைகளுக்கு விற்று பணம் தேடிக்கொண்டான் அவன்.


யுத்தமுனையில் நின்ற கணவன் ஒரு நாள் சஞ்சிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த போது மனைவியான மர்லினின் நிர்வாணப் படத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றான். புத்திமதிகள் கூறி மர்லினுக்கு கடிதங்கள் எழுதினான். அவள் அவற்றை உதாசீனம் செய்துவிட்டு தன் வழியிலேயே நடக்க ஆரம்பித்தாள். 1946இல் நாடு திரும்பிய மர்லினின் கணவன் அவளை விவாகரத்து செய்தான்.

அந்த ஆண்டிலேயே மர்லின் சினிமா உலகில் காலடி எடுத்து வைத்தாள். சினிமாவில் அவளது அழகும் கவர்ச்சியும் அவளுக்கு கைகொடுத்தன. பணமும் புகழும் வந்து குவியத் தொடங்கியது. மர்லினுக்கு 1948இல் கலிபோர்னியாவின் அழகியாக விருதும் கிடைத்தது. 1956இல் மர்லினுக்கு சினிமாவில் அதிகளவு வாய்ப்புகள் கிடைத்தன. உல்லாச மாளிகை, சொகுசு கார்கள் என டாம்பீக வாழ்வு அமைந்தது.

1962இல் மேற்கு நாடுகளுக்கும் கம்யூனிச நாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் அதகரிக்க, உலகம் முழுவதும் பதற்றம் நிலவியது. இக்காலகட்டத்தில்தான் மர்லின்மன்றோவின் மரணமும் சம்பவித்தது. அவளது படுக்கையறையில் ஆடைகளற்ற நிலையில் அவள் இறந்து கிடந்ததை அவளின் வீட்டுப்பணிப் பெண்ணே முதலில் கண்டாள். விசாரணைகளின் பின்னர் அளவுக்கதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டதால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

பின்னர் 1999ஆம் ஆண்டு மர்லினுக்கு சொந்தமான டயறிகள், வேறு சில ஆவணங்கள் மூலமாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அவளது அந்தரங்கமான வாழ்கையும் வெளிச்சத்திற்கு வந்தது. பலருக்கு அவை சுவாரஸ்யமான தகவல்களாவும் அமைந்தன. மர்லின் அவளது பதினாறு வயதிலிருந்து மூன்று திருமணங்களை முடித்திருக் கின்றாள். அவை யாவும் விவாகரத்திலேயே முடிடைந்துள்ளன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்த மற்றுமொரு அந்தரங்கமும் வெளியானது. அமெரிக் காவின் புகழ்பெற்ற ஜனாதிபதியான ஜோன் எவ். கென்னடியுடனும், அவரது சகோதரரான செனட்டர் கென்னடியுடனும் மர்லினுக்கிருந்த இரகசியத் தொடர்புகளும் வெளியாகின. அதுமட்டுமல்லாது, உலகின் சிறந்த நடிகராக விருது பெற்றவரான மார்லன் பிறாண்டோவும் மர்லினுடன் தொடர்புகளை வைத்திருக்கின்றார்.

மர்லின் இறப்பதற்கு சற்று முன்னதாக அவளது வாழ்வில் இறுதியாக தொலைபேசியில் உரையாடியது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியுடன் தான். எல்லாவற்றையும் விட மர்லின்மன்றோவின் மரணம் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது மட்டும் என்னால் முடியாது.

■ இம்சையரசன்

திருமணமாகி ஓராண்டு நிறைவு நாள் அன்று. உறவினர்கள், நண்பர்கள் வந்து வாழ்த்திச் சென்றார்கள். அன்று மாலை அவனும் அவளும் மட்டும் தனிமையில் மனம் விட்டு உரையாடிக் கொண்டிருந்தனர்.

அவளருகே அமர்ந்து மிக நெருக்கமாக அவள் விழிகளை இரசித்தவாறே அவன் கேட்டான்.

"நான் திடீரென இறந்துவிட்டால் என்ன செய்வாய்?"

அவள் முகத்தைச் சுழித்தவாறே

"நல்ல நாளில் ஏன் இப்படி ஒரு கேள்வியை கேட்கிறீர்கள்" என்றாள்.

"இல்லை உண்மையாகத்தான் கேட்கின்றேன். நான் இறந்து விட்டால் இன்னொரு திருமணம் செய்வாயா அல்லது தனிமையாகவே வாழ்ந்து விடுவாயா?"



சற்று மௌனமாக இருந்து விட்டு அவள் கூறினாள்.

"நீங்கள் இல்லாமல் நான் தனிமையாக வாழ்வதை நீங்கள் நிச்சயம் விரும்ப மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால், நான் இன்னொருவரைத் திருமணம் செய்து கொள்வேன்"

"அப்படியானால் இந்த வீட்டில்தான் இருவரும் குடியிருப்பீர்களா?"

"நிச்சயமாக. திருமணம் முடித்து எனக்காக நீங்கள் வாங்கிய புதிய வீடு இது. உங்கள் நினைவாக இந்த வீட்டிலேயே நாங்கள் இருப்போம்."

"அப்படியானால் எனது காரையும் அவனிடமே கொடுத்து விடுவாயா?"

"அதில் என்ன தவறு? இந்தக் கார் கூட எமது திருமணத்திற்குப் பின்னர் புதிதாக வாங்கியதுதானே. அதில் நாமிருவரும் எங்கெங்கொல்லாம் சுற்றித் திரிந்திருக்கின்றோம். அதனால் அந்தக் காரையும் உங்கள் நினைவாகவே பயன்படுத்திக் கொள்வோம்."

"ம்... வீட்டிலிருக்கின்றதே அந்தப் பியானோ. இரவு வேளைகளில் அதை நான் வாசிக்க நீ அந்த இசையில் இலயித்துப் போவாயே.. அந்தப் பியானோவையும் அவனிடமே வாசிக்கக் கொடுத்து விடுவாயா?"

அவள் கூறினாள்.

"அதுமட்டும் என்னால் செய்ய முடியாது"

"ஏன்?"

"ஏனென்றால், அவருக்கு பியானோ வாசிக்கத் தெரியாது" என்றாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப் பார்வை


அமரதாஸ்
amara.2011@yahoo.com

# பிரசன்ன விதானகே இன் ஆகாச

இன்றைய உலகில், நல்ல பயன்விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலான, சீரியசான கலைச் சாதனமாக சினிமாவைக் கையாளும் திரைப்பட இயக்குனர்கள் வரிசையில் இலங்கையின் சிங்களத் திரைப்பட இயக்குனர் பிரசன்ன விதானகே செயற்படுகிறார்.

இவர் ஆறாவதாக இயக்கிய 'ஆகாச குசும்' என்ற திரைப்படமானது, ஒருகாலத்தில் பிரபல நடிகையாக இருந்து தற்போது தனிமைப்பட்ட நிலையில் சீவிக்கும் ஒரு பெண்ணின் அந்தரங்க வாழ்வை, அவளது மனோவுலகின் பரிமாணங் களை, உள்முகப் பயணத்தை, குற்ற உணர்வின் தாற்பரியங்களை மையக் கதையாடலாகக் கொண்டு பல்வேறு தளங்களில் விரிவடைகிறது. நாம் வாழும் உலக மயமாக்கச் சூழலின் மாயச்சுழற்சிக்கு உட்பட்டு நம் கவனப் பரப்பிற் குட்படத் தவறும் மனிதர்களை, அவர்களின் வாழ்க்கை முறைகளை, பாலியல்புத் தன்மைகளை புரிந்து கொள்ளவும், பகுப்பாய்வு செய்யவும் கோருகிறது.

ஆகாச குசும் என்பது வானத்து நட்சத்திரங் களை குறிக்கிறது. (தமிழ் மொழி பெயர்ப்பில் ஆகாயப் பூக்கள்) பிரபலமான நடிகர்களை, நட்சத்திரங்கள் என்று குறிப்பிடும் வழக்கமுள்ளது. வானத்து நட்சத்திரங்களின் குறிப்பிட்ட கால ஜொலிப்பை, அவற்றின் நிலையற்ற தோற்றப்பாட் டினை உருவகப்படுத்தும் விதத்தில், உள்ளடக்கத் தினை அல்லது பேசு பொருளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அமைந்திருக்கும் 'ஆகாச குசும்' எனும் இத் திரைப்படத்தின் தலைப்பு வசீகரமானது.



இத் திரைப்படத்தின் திரைக்கதையானது மிகவும் எளிமையாகவும் அதேநேரம் ஆழமான பரிமாணங்களுடனும் கட்டமைக்கப்பட்டிருக் கிறது. உலகமயமாக்கலின் விளைவுகளையும், புதிர்களும் அந்தரங்கச் சந்துக்களும் நிறைந்த பெண்ணுலகின் பரிமாணங்களையும் பரிசீலிக் கும் இத் திரைப்படத்தின் மையக் கதாபாத் திரமான சந்தியாராணி, முன் ஒரு காலத் தில் மிகப்பிரபலமான நடிகையாக இருந்த வள். வயோதிபம் நெருங்கி, திரையுல கச் சூழலில் இருந்து அந்நியமாகி வாழ்கிறவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குசும்

## பெண்ணுலகின் பரிமாணங்கள்

முற்காலத்தில் பிரபலமாகவுள்ள நடிகர்களின் (இருபாலாரும்) அந்தரங்க உறவைத் தொடரும் இடமாக சந்தியாராணியின் வீடு அமைந்திருக் கிறது. அவர்களுக்காக ஒரு அறையை ஒதுக்கித் தந்து, அதன் மூலம் கிடைக்கும் வாடகைப் பணத் திலும், சிறுதொழில் ஒன்றின் மூலம் (பற்றிஸ் தயாரித்து விற்றல்) கிடைக்கும் வருமானத்திலும் தன் வாழ்வைக் கடத்திக் கொண்டிருக்கிறாள். அதேநேரம் தன்னைப் பொருளாதார ரீயாக நம்பியிருக்கக்கூடிய தங்கையான மல்லிகாவிற்கு உதவுபவளாகவும் இருக்கிருள்.

இந்த நிலையில். தற்கால நடிகை ஷாலிகா, தனது காதலனை அந்தரங்கமாக சந்திக்கும் இடமாக சந்தியாராணியின் வீடு அமைகிறது. ஷாலிகாவின் கணவனுக்கு இந்த ரகசிய உறவு தெரிந்து அங்கு அவன் பொலிசாரை அழைத்து வந்து விடுகிருன். அங்கு அறையினுள் தங்கியிருக் கும் ஷாலிகாவிற்கும், அவளது காதலனுக்கும், அவர்களுக்குத் துணைபோன சந்தியாராணிக்கும் நெருக்கடி நிலமைஏற்படுகிறது. ஷாலிகா தன் வீட்டிலிருந்து வெளியேறி வந்து சந்தியாராணி யுடன் தங்கிவிடுகிறாள். பின்னர் காதலனால் புறக்கணிக்கப்படுகிறாள்.

பிரியா தனது நெருங்கிய தோழியான பண்டி யுடன் இரவு நடன விடுதியில் பணிபுரிபவள். ஒருமுறை அங்கு பிரச்சினை ஏற்பட்டு அவள் பொலிசாரின் விசாரணைக்குட்பட நேர்கிறது. எதிர்பாராதவிதமாக அவள் தன்னை சந்தியா ராணியின் மகள் என்று அறிமுகம் செய்து கொள் கிருள். போலிசார் சந்தியாராணியிடம் தொடர்பு கொள்கையில் இதனை சந்தியாராணி மறுதலிக்கி றாள். அவளுக்கு திருமணமாகவில்லை என்ப தான விம்பத்தையே அவளது தகப்பனும் அவ ளும் ஏற்படுத்தி வெளயுலகில் நிலைநிறுத்தியிருக் கிறார்கள். உண்மையில் சந்தியாராணி மிக இள வயதில் திருமணமாகி ஒரு பெண் குழந்தைக்குத் தாயானவள். நடிகையாவதற்காகவே கணவன் மற்றும் குழந்தையிடமிருந்து பிரிய நேர்ந்திருக் கிறது.

தன் உண்மைமகளைப் பற்றிய அறிமுகமும், அவளைப் பற்றிய எண்ணங்களும் சந்தியாராணி யின் இருப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகி றது. நிலைகுலைந்து குற்ற உணர்வில் தவிக்கும் அவளுக்கான உளவளத் துணையாக ஷாலிகா இருக்கிறாள். வாழ்வில் பாதிப்பிற்குள்ளான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கப்பட்ட சந்தியாராணியும், ஷாலிகாவும் பரஸ்பரத் துணையாகி விடுகிறார்கள்.

தன் மகளைத் தேடியலைகிறாள் சந்தியாராணி. தன்னுறவை மறுதலித்த தாய் மீது வெறுப்பை வெளிப்படுத்தும் பிரியா, தன் தோழியான பன்டியுடன் விலகி ஓடுகிறாள். கர்ப்பமடைந்த நிலையில் இரவு நடன விடுதியிலிருந்து விலகி ஒதுங்கி வாழ முயலும் அவளுக்கு எயிட்ஸ் தொற்று இருப்பது தெரிய வருகிறது.

முரண்பட்டு விட்ட தாய்-மகள் உறவின் பின்னிருக்கும் தவிப்பும், உள்ளார்ந்த நேசிப்பும் இத்திரைப் படத்தின் பிற்பகுதியில் நிறைந்திருக்கிறது. பிறந்திருக்கும் தன் பேத்தியைக் கையிலேந்தி இது என்னை மன்னிக்குமா என்று சந்தியாராணி அங்கலாய்ப்பதுடன் அவளது அகவயமான மற்றும், புறவயமான பயணம் ஒரு பிரதான சந்தியை அடைகிறது.

சார்ந்து படைப்பாளியை வரையறுத்து விடுவது ஆரோக்கியமானதல்ல.

தங்கள் படைப்புகளில் பெண்பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் தந்திருக்கின்ற, உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர்களான இங்மர் பெர்க்மன், சத்யஜித் ரே போன்றோரை பிரசன்ன ஞாபகப் படுத்துகிறார். அவர் தனது படைப்புகளில் நெருக்கடிகளுக்குள்ளாகும் கதாபாத்திரங்களது மனவியல் சார்ந்த நுட்பமான பதிவுகளை, அவர்கள் மீதான-அத்தகையவர்கள் மீதான கரிசனையினை, புரிந்துணர்வினை, ஒத்துணர்வினை பார்வையாளர் மட்டத்தில் நிகழ்த்தி விடுகிறார்.

பிரசன்னவின் 'புரஹந்த களுவர' என்ற உலகப் புகழ்பெற்ற திரைப்படத்தின் மையப் பாத்திரமாக வயோதிபமடைந்த வன்னிஹாமி இடம்பெறுகிறார். தனிமையை உணரும் தந்தையாக அவரது பாத்திரவார்ப்பு மிகவும் ஆழமானது;



இயல்பானது; எளிமையானது. அத்திரைப் படத்திலும் ஏனையவற்றிலும் வெளிப்படுகிற பிரசன்னவின் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் பார்வையும் கதையாடலும் மிகுந்த கவனிப்பிற்குரியவை.

பின்னர் பிரியா தன் தாய்க்கு எழுதிய உருக்கமான கடிதங்களின் காட்சிப்படுத்தலோடு அவற்றை எடுத்துரைக்கும் அவளது தீர்க்கமான பின்னணிக் குரல் இழைய, 'ஆகாச குசும்' திரைப்படம் நிறைவடைகிறது.

ஒரு ஆணாக இருக்கும் பிரசன்ன, பெண்களின் மனோவுலகை இவ்வளவு நுணுக்கமாகவும், ஒத்துணர்டனும் (empathy) அணுகியிருக்கும் விதம் ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. பெண்ணுலகை அவர் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்து தரிசிக்க விளைகிறார். நம்மிலும் அத்தகைய தரிசனம் நிகழ நம்மை வழிப்படுத்துகிறார். இவை பற்றியும் பிரசன்னவின் படைப்புலகில் இழைந்திருக்கும் பெண்பாத்திரங்களின் முக்கியத்துவம் குறித்தும் நண்பர் ஒருவரிடம் பகிர்ந்து கொண்ட போது, பிரசன்ன பெண்மைய சினிமாக்காரனா என்று கேட்டார்.

பிரசன்னவை, பொதுவாகவே ஒரு படைப்பாளியை அப்படியொரு வட்டத்தினுள் அடக்கி விட முடியாது; கூடாது. ஒருவரது படைப்புலகினுள் சில விடயங்கள் தூக்கலாக இருக்கக் கூடும். அது இயல்பானதே. தூக்கலான விடயங்களைச்

நேர்காணல் வடிவிலான வெளியீட்டிற்காக பிரசன்னவுடன் என்னால் நிகழ்த்தப்பட்ட இன்னமும் எழுத்து வடிவில் வெளியிடப்படாத கலந்துரையாடலின் போது இத்தகைய விடயங்கள் பரிமாறப் பட்டிருக்கின்றன.

ஆகாச குசும் திரைப்படத்தினூடாக பெண்ணுலகினைத் திரைவிரிக்கும் பாங்கினாலும் நடிகர்களைக் கையாண்டிருக்கும் விதத்தினாலும் பிரசன்ன, உலகில் சிறந்த இயக்குநர்களின் வரிசையில் மிளிர்கிறார்.

2008இல் நடைபெற்ற சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் சந்தியாராணியாக நடித்த மாலினி பொன்சேகாவிற்கு வெள்ளி மயில் விருதும், 2009இல் இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச லெவாந்தே திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருதும் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இத்திரைப்படமானது 2009இல் ஸ்பெயினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற கிரனாடா சர்வதேச திரைப் பட விழாவில் ஆசியாவின் சிறந்த திரைப் படத்திற்கான 'நெட்பெக்' விருதும், 2009இல் பிரெஞ்சு நாட்டு வெசூல் சர்வதேச திரைப்பட விழாவில் ஜுரி யின் கௌரவிப்பையும் பெற்றுள்ளது. மேலும் உலகின் பல்வேறு திரைப்பட விழாக்களில் இத்திரைப்படம் பங்கேற் புக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

சந்தியாராணியாக நடித்திருக்கும் மாலினி பொன்சேகா மட்டுமல்ல பிரி யாவாக வரும் நிம்மி ஹரஸ்கம, ஷாலி காவாக வரும் தில்கானி எக்க நாயக, பண்டி யாக வரும் சமனலி பொன்சேகா ஆகியோரும் தமது சிறப்பான நடிப்பி னால் இத்திரைப்படத் தினை வளப்படுத் தியிருப்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது.







ஆகாசகுசும் திரைப்படத்தினூடாக பெண் ணுலகினைத் திரைவிரிக்கும் பாங்கினாலும் நடிகர்களைக் கையாண்டிருக்கும் விதத்தினாலும் பிரசன்ன, உலகில் சிறந்த இயக்குநர்களின் வரிசையில் மிளிர்கிறார்.





சினிமா என்பது காட்சிக்கலை என்ற அடிப்படையில் (சினிமா காண்பதற்கு மட்டுமானதல்ல) பிரசன்னவின் காட் சியமைப்புகள் தீவிரமானவை, சுவாரஸ் யமானவை, ஆழ்ந்த கலையனுபவத்தை தருபவை.

### உதாரணம்

1.ஷாலிகா, தனது ரகசியக் காதல னும் நடிகனுமான உதித்துடனான உடலுறவின் பின்னர் படுக்கையிலிருந்த நிலையில் தன்மீதான காதல் உண்மை யானதா என்று கேட்கிறாள். அவனோ அவள் பக்கம் திரும்பி சிகரெட் புகை வளையங்களை ஊதுகிறான். ஷாலிகா அவற்றைத் தன் கைகளால் பிடிக்க முயற்சிக்கிறாள்.

2.இரவு நடன விடுதியின் உள்ளே தன்னைத் தேடி வரும் தாயை வெறுப் பேற்றும் நோக்கிலும், அவளைப் புறக் கணிக்கும் வகையிலும் அருகிலிருக்கும் ஆணை இறுக்கி முத்தமிடுகிறாள்.

3.தன் மகளின் இருப்பை அறிந்த பிறகு, ஷாலிகா முன்னி லையில் தேனீர் தயாரிக்க முற்படுகையில் சந்தியாராணி உடைகிறுள். அந்த இடத்தில் அவள் கொதிக்கும் சுடு நீராகி விடுகிறுள்.

4.தன் தோழியான பிரியாவின் வேண்டுகோளுக்கிணங்க அவ ளைத் தேடிவரும் தாயிடமிருந்து அவளை மறைத்து விட்டு, அவள் நன்றி தெரிவிக்கும் போது பண்டி கலங்கியழுகிறாள். (ஆகாச குசும் திரைப்படத்திற்கான விமரசனம் எழுதுவதற்காக அதன் சிங்கள மூலப் பிரதியினை DVD வடிவில் இயக்குநர் பிரசன்ன என்னிடம் தந் திருந்தார். அதனை வீட்டில் என் னுடன் பார்த்துக்கொண்டிருந்த என் உறவு வட்டத்தைச் சேர்ந்த சிங் களம் புரியாத இளம் பெண், பண்டி கலங்கி அழுதபோது தானும் கலங்கி அழுதார்.)


**மேலும் சில பதிவுகள் அடுத்த இதழில் ●●**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல்

# பொன்னகரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ■ புதுமைப்பித்தன்



**தமிழில் மிகச்சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான புதுமைப்பித்தனின் சொந்தப் பெயர் சோ.விருத்தாசலம். 1906 ஏப்ரல் 25ஆம் திகதி பிறந்த இவர் 1948 மே5ஆம் திகதி காலமானார். இவர் நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாகவும் கருதப்படுகின்றார். இவரது படைப்புக்கள் தனித்துவமானவை. கேலியும், சமூக விமர்சனமும், முற்போக்குச் சிந்தனையும் கொண்டதாக இவரது படைப்புகள் அமைந்துள்ளன. 1934இல் இவரது சிறுகதைகள் மணிக்கொடி இதழில் பிரசுரமாகத் தொடங்கின. தொடர்ந்து பல இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகின. திரைப்படத்துறையிலும் இவர் பணிபுரிந்துள்ளார். காசநோய் காரணமாக இவர் காலமானார். 2002ஆம் ஆண்டு இவரது படைப்புகளை தமிழக அரசு நாட்டுடமையாக்கியது. இலக்கியப்படைப்புத்துறையில் ஆர்வமுள்ள புதியவர்கள் புதமைப்பித்தனின் படைப்புக்களை கட்டாயம் படித்திருக்க வேண்டும்**

பொன்னகரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்பட வேண் டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம் மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப் பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அது தான் அங்கு 'மெயின் ராஸ்தா'. கைகோர் த்த நான்கு பேர் வரிசையாக தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால். இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும் ? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள். ஆமாம் வசிப்பதற்குத்தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின் சார விளக்கு? ஞாபகமில்லை. சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த 'முனிசிபல்' தீர்த்தத்தில், மீன் ஏது ? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க்குழந்தைகளின் ரகசியம்.


ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளை யாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத் தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? போனால் பெற் றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன 'கிளாக்ஸோ மெல்லி னஸ் பூட்' குழந்தைகளா கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புதைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று " குட்மோர் னிங் சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்கு கிடைக் கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகல வென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதி ருந்து தான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தண்ணீர் எடுக்கவரும் பெண்கள். அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள், விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை' ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால் பிறகு கண் என்னவாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பக்டீரியா, விஷக் கிருமிகள், கொலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும்.

பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்ளுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று வம்சத்தை விருத்திசெய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு - வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக் கவலையில்லை. அது வேறு உலகம் ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி.வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான்; சொந்த வண்டிதான். அம்மாளு , முருகேசன் (அவள் புருஷன்) அவன் தாயார், தம்பி, குதிரை - ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு - (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்' , முருகேசன் தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்க காசு - எல்லாம் இதற்குள் தான். எல்லாரும் ஏகதேசக் குடியர்கள் தான். 'டல் ஸீஸனில்' பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! பத்தும் பசி வந்திடப் பறந்து போகும் என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒரு நாள் இருந்தால் உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி, அவனும் அவன் குதிரையும் 'தண்ணி' போட்டு விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்கு பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டு வந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது? அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

கும்மிருட்டு. பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால் முனிசிபலிடி என்ன செய்ய முடியும்.

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒரு வாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவும் – மகனும்



ஒரு இளைஞன் தனது அப்பாவிடம் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தரும்படி கேட்டான். அப்பா சொன்னார்.

"வாங்கித் தருவதில் பிரச்சினை இல்லை. முதலில் நீ உன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் . உனது வேலைகளை உடனடியாகச் செய்து முடிக்கப் பழக வேண்டும். அவற்றைத் தள்ளிப் போடக்கூடாது. உடைகளை நேர்த்தியாக உடுக்க வேண்டும். உனது நீண்ட தலைமுடியை வெட்டி நல்ல இளைஞனாக தோற்றமளிக்க வேண்டும்" என்றார் தந்தை.

மகன் அடுத்த நாளே அவனது வேலைகளை எல்லம் முடித்தான். நல்ல உடைகளை அணிந்தான். தந்தை மகிழ்ச்சியடைந்தார். ஆனாலும்

"தலைமுடியை ஏன் வெட்டவில்லை" என்று அவர் மகனிடம் கேட்டார்.

அவன் கூறினான்.

"அப்பா அது பற்றி நான் யோசித்தேன். தலைமுடி வளர்ந்திருப் பதில் என்ன பிரச்சினை? யேசுநாதர் கூட நீண்ட தலைமுடிதானே வைத்திருந்தார்" என்றான்.

தந்தை கூறினார்.

"உண்மைதான் மகனே யேசுநாதர் நீண்ட முடிதான் வைத்திருந்தார். ஆனால், அவர் எங்கு போனாலும் நடந்துதான் போவார் என்றார் தந்தை.



கண்ணாக நீ இருந்தாய்
இமையாக நானிருந்தேன்
இரவெல்லாம்

உறக்கமாய் நான் இருந்தேன்
கனவாக நீ இருந்தாய்
இரவெல்லாம்


எனக்குத் தெரியும்
உன்னைக் காதலிப்பதென்பது
என்னைச் சிலுவையில்
அறைந்து கொள்வதாகும்

காதலிப்பதில் என்ன பயன்
நீ வரும் பாதை
எதுவென்று தெரியாமல்.

பாதை தெரிந்தும்
பயன் தான் என்ன
நீ யாரென்று தெரியாமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழகியின் துரோகம்

அ.ஷண்முகசுந்தரம்

**வியட்நாம்** நாட்டில் ஒரு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த 'தீப்' என்ற பெண் பேரழகியாக விளங்கினாள். அவளுடைய உறவினனான 'நிகோ' என்ற இளைஞன் அவளை உயிருக் குயிராகக் காதாலித்தான். ஆனால், தான் ஒரு அரண்மனையில் வாழ்வது போல் அவள் அடிக்கடி கனவு கண்டு, யாரோ ஒரு ராஜகுமாரன் திடீரென்று வந்து தன்னை அழைத்துச் செல்வான் என்று நம்பி அவனை அலட்சியப்படுத்தி வந்தாள்.



ஒருநாள் அவள் தோட்டத்தில் சுள்ளிகளைச் சேகரிக்கும் போது விஷப்பாம்பு ஒன்று அவளைக் கடித்து, சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டாள். நிகோ அருள் வாக்கு கேட்ட போது, கடலின் நடுவிலிருந்து ஒரு அமானுஷ்யத் தீவுக்கு அவளுடைய உடலை எடுத்துச் செல்லுமாறு ஆணை பிறந்தது. அத்தீவின் மலை உச்சியில் ஒரு துறவியைச் சந்தித்தான் நிகோ. அன்பின் அடையாளமாக அவன் தன் வலது கை நடுவிரலை வெட்டி ரத்தத்தை அவள் மீது விழச்செய்தால் உயிர் பிழைப்பாள் என்றார் அவர். சற்றும் தயங்காமல் அவன் தன் விரலைத் துண்டிக்க, மூன்றா வது சொட்டு ரத்தம் அவளுடைய உடலில் விழுந்த கணமே உறக்கத்திலிருந்து எழுபவள் போல் விழித் தெழுந்தாள்.

துறவி அவளிடம் "உனக்கு மறுபிறவி அளித்த இந்த உத்தமசீலனை மணந்து என்றென்றும் அவனுக்கு விசுவாசமாக நடப்பாயாக! தவறினால்..." என்றவர் அந்த வாக்கியத்தை முடிக்காமலேயே மறைந்து விட்டார்.

நிகோ அவளுடன் ஊருக்குத் திரும்பும்போது வழியில் நகரத் துறைமுகத்தில் படகை நிறுத்தி, "நீ இதிலேயே பத்திரமாக இரு. நான் சந்தையில் சில முக்கிய பொருட்களை வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிச் சென்றான்.

தீப் அப்படகின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு உல்லாசக் கப்பலை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அது ஒரு இளவரசனுக்குச் சொந்தமானது.


தளத்தில் நின்றிருந்த அவன் அவளைக் கப்பலுக்குள் வந்து தேநீர் அருந்துமாறு அழைத்தான். அதன் உட்புற அலங்காரங்களையும், பலவகை விருந்துப் பண்டங்களையும், வேலைக்காரார்களின் பணிவான உபசரணைகளையும் கண்டு அவள் பிரமித்தாள். அதேபோல் அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை அழகையே கண்கொட்டாமல் ரசித்துக் கொண்டிருந்த அரசகுமாரன், "நான் உன்னை மணக்க விரும்புகிறேன். என்னுடன் வருவாயா?" என்று கேட்டான். அந்தக் கணமேஅவள் தன் காதலனை மறந்து, அதற்குச் சம்மதித்தாள். சற்று நேரத்தில் கப்பல் புறப்பட்டது.

படகில் அவளைக் காணாமல் நிகோ திகைத்தான். தூரத்திலிருந்து நடந்தவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு மாலுமி போனம் நாட்டு இளவரசர் அவளைக் கடத்திச் சென்று விட்டதாகக் கூறினான். நிகோ பலம் கொண்டமட்டும் துடுப்பை வீசியும் கப்பலின் வேகத்துக்கு அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஒரு வாரம் கழித்தே அந்நகரை அடைந்தான்.



இதற்குள் இளவரசர் - தீப் திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்து, அவள் சுகபோகங்களில் திளைத்துக் கொண்டிருந்தாள். அவன் அரண்மனை வாயிலை அடைந்தபோது, அவள் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் திடுக்கிட்டு, "நீ எப்படி இங்கு வந்தாய்? என் வாழ்க்கையைக் கெடுத்துவிடாதே! விரைவில் இங்கிருந்து போய்விடு" என்றாள் பதட்டமாக.

அவளுடைய துரோகத்தைக் கண்டு மனமுடைந்த அவன், "ஆகட்டும் ஆனால், உனக்கு இந்த வாழ்வை அளித்த என் மூன்று சொட்டு ரத்தத்தைத் திருப்பித் தா, நான் போய்விடுகிறேன்" என்றான். அவன் தொலைந்தால் போதும் என்று எண்ணிய அவள் மலர் பறிக்கும் கத்தியால் தன் கையில் கீற, வடிந்த ரத்தத்தை அவன் தன் உள்ளங்கையில் ஏந்தினான். மூன்றாவது சொட்டு ரத்தம் விழுந்த போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.


**அவன் தொலைந்தால் போதும் என்று எண்ணிய அவள் மலர் பறிக்கும் கத்திரியால் தன் கையில் கீற, வடிந்த ரத்தத்தை அவன் தன் உள்ளங்கையில் ஏந்தினான். மூன்றாவது சொட்டு ரத்தம் விழுந்த போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.**

அவளுடைய உடல் சுருங்கிக் கொண்டே போய் ஒரு கொசுவின் வடிவத்தை அடைந்தது. துறவியின் சாபம் நினைவுக்கு வர, அவள் நடுங்கினாள். "நிகோ, என்னை மன்னித்து விடு" என்று கெஞ்சியபடி கொடுக்கால் அவனைக் கடித்து ரத்தத்தை உறிஞ்ச முயன்றாள்.

ஆனால், நிகோ ஏமாறத் தயாராக இல்லை. அங்கிருந்து ஓட்டமாக ஓடி, படகில் அத் தீவை அடைந்து, துறவியிடம் நடந்தவைகளைக் கூறினான். ஊருக்கும் திரும்ப மனமில்லாமல், அவருடைய சீடனாகி, பணிவிடை செய்வதிலேயே தன் எஞ்சிய நாட்களைக் கழித்தான்.

பல ஆண்டுகள் கழித்து, ஒருநாள் ஆர்வ மிகுதியால் துறவியிடம், "பிறகு தீப் என்ன ஆனாள்?" என்று கேட்டான்.

"அவள் ஓயாமல் உன்னைத்தேடி அலைந்து, களைத்து, நோய்வாய்ப்பட்டாள். சாகும் தறுவாயில் தன் குழந்தைகளிடம், நீங்கள் நாலா திசைகளிலும் பறந்து சென்று கண்ணில் பட்ட மனிதர்களையெல்லாம் கடித்து, ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு வந்து, என் மீது உமிழுங்கள். எப்போதாவது, உங்களில் ஒருவர் 'நிகோ' அல்லது அவருடைய வாரிசுகளைக் கடிக்க நேர்ந்து, அந்த ரத்தம் என்மீது பட்டால் நான் மீண்டும் பிழைத்தெழக்கூடும் என்றாள். அவளிடம் கற்ற 'நிகோ என்னை மன்னித்து விடு' என்ற சோக கீதத்தை ரீங்கரித்த வண்ணம் அவை நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் கண்ணில் பட்ட மனிதர்களையெல்லாம் கடித்துக் கொண்டிருக்கின்றன. இனி, இது என்றென்றும் தொடரும்" என்றார் துறவி.




"இந்தப் பரீட்சையில் கணக்கில நீ எண்பது மார்க்ஸ் எடுக்க வேணும்"

"சேர் நான் நூறு மார்க்ஸ் எடுப்பன்"

"என்ன ஜோக்கடிக்கிறாயோ"

"முதலில ஜோக்கடிச்சது நீங்கள்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தக் கண்கள் மட்டும் என்னுடன்

பசுமைநிறைந்த வயல்வெளிகளும் உயிரோட்டம் உள்ள நீர் நிலைகளும் வனப்புமிகு வனங்களும் நிறைந்த வன்னி மண் அழகே அழகுதான். குளங்களும் குன்றுகளும் கண்டு குதூகலிக்கும் மனம். இரணைமடுக்குளமும், தூயமடு மாதாவும், வற்றாப்பளை கண்ணகையும், ஒட்டுசுட்டான் சிவனும் என வணக்கத்திற்குரியன எத்தனைதான். வன்னி அழகைக் காண கண் கோடி வேண்டும்.

உண்மைதான் அடங்காப்பற்று வணங்காமண் வீரம் நிலைத்த மண் அல்லவா!

புறநானூற்று வீரம் பொதிந்த மண்ணில் தமிழரின் வாழ்வோடு ஒத்திருந்த அகநானூறும் இல்லாமல் விடவில்லை. புறநானூற்றின் வீரமும்ம். புறநானூற்று எண்ணமுமேஇருந்த என்னுள்ளே அகநானூற்றின் விதையை விதைத்தாள் ஒருத்தி.

ஆயிரம் அழகுகள் கொட்டிக் கிடந்தாலும் நான் அதில் என்னை மறந்திருந்தாலும் அவ் அழகுகள் என் கண்ணை விட்டு மறைவது அவள் என்னருகே இருக்கையிலேயே.

அவள் கண்கள் அகநானூற்றுத் தலைவியின் கண்களை ஒத்திருக்கும். அவளின் மேற்புருவம் வீரனின் வாளை ஒத்திருக்கும். கறுப்புத் திராட்சை கண்களாயினவோ என வியப்பதில் தவறுவதில்லை.

செவ்விதழ் வாய் பிறை ஒத்த நுதலும் முழுமதி முகமும் முந்திரி மூக்கும் என்னை ஈர்த்தது என நீங்கள் நினைக்கலாம். வன்னி போன்றே வனப்புகள் பல அவளிடம் இருந்தாலும் என்னை அவளிடம் ஈர்த்தது, உயிரில் கோர்த்தது அவளது அந்தக் கண்கள்தான். இரணைமடுவில் துள்ளிய மீனொன்று தாவி வந்து கண்களாகியதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயூரன்**

அப்படியே அகநானூற்றுத் தலைவியை என் கண் முன்னே நிறுத்தியது அவள் கண்களே. தன் கண்க ளுக்கே உரியபெயரையும் வைத்துக் கொண்டாள்.

என் நடையை சோழன் என்பாள். அன்பை சேரன் என்பாள். பெருமையை பாண்டியன் என்பாள். மனதை பாரி என்பாள். என்னை புறநானூற்றுக்கு அழைத்துச் செல்வாள். மணிக்கணக்கில் தேன்மதுரத் தமிழை மொழிவாள். அவள் என்னுடன் என்ன கதைத்தாலும் நான் கதைப்பது மங்கையவள் மைவிழிகளுடனேயே. அவளைக் காணாத நாட்கள் இருக்கவில்லை என்பதை விட அவள் கண்களைக் காணாத நாட்கள் இருந்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவள் கண்கள் மீது நான் கொண்ட காதல்தான் அவள் மீது காதல் கொள்ள வைத்தது. காலைக் கதிரவனையும் குளிர் மதியையும் அவள் கண்களில் கண்டேன். அவள் கண்களைக் கண்டே திங்கள் பல கடந்தன. இறைவனை வேண்டி னேன். அவள் கண்களைப் பார்த்து நீண்ட நாள் வாழ இயற்கை இடையில் நாடகமாடிற்று செயற்கை வடிவில் போர் அரக்கன் சதிராடினான். வனப்புமிகு வன்னிமண் வறண்டு போயிற்று. பல்குழலின் பரிசில் பசுமை குலைந்தது. கால ஓட்டத்துடன் மக்களும் ஓடினர். உறவுகளைக் கூட மறந்து ஓட வேண்டிய சூழல் உண்டானது. சொந்த ஊரையும் விட்டு சொல்லிக் கொள்ளா மல் இடம்பெயர்ந்தாள் அவள்.



**குண்டு மழைக்குள் சிக்குண்டாலும் அவள் கண்களைக் காணாது நானும் இருக்கவில்லை. நாளும் இருக்கவில்லை.**

குண்டு மழைக்குள் சிக்குண்டாலும் அவள் கண்களைக் காணாது நானும் இருக்கவில்லை. நாளும் இருக்க வில்லை. கரும்புகைக்குள்ளும் அவளது கருவிழி ஒளிர்ந்தது. மணிக்கணக்கு நாளாகி, நாளும் திங்களாகி, வன்னியும் சுருங்கியது. இறுதியில் வன்னி மண்ணை விட்டுப் பிரியும் நேரத்திலும் அவள் என் னுடனேயே இருந்தாள். அவள் என்னுடன் கதைப் பாள் நான் அவளின் கண்களுடன் கதைப்பேன்.

வன்னியின் இறுதி நாட்கள் எண்ணப்பட அவள் கவலை கொண்டாள் . இருவரும் பிரிந்து விடு வோமோ என்று. இருந்தால் ஒருவர் மீது ஒருவர் சாய வேண்டும். இறந்தால் இம் மண்ணில் தலைசாய வேண்டும் என்றே இறைவனை அவள் வேண்டிக் கொண்டாள். வற்றாப்பளைக்குப் பொங்கல், புதூர், புளியம்பொக்கணைக்கு பொங்கல். திருமுறிகண்டி யானுக்கு 108 தேங்காய், மடுவுக்கு யாத்திரை, ஒட்டு சுட்டானுக்கு பிரதோச விரதம், மம்மிலுக்கு அவி யல் என்றெல்லாம் அவளது வேண்டுதல் நீண்டது.

கூவும் எறிகணைகள், சிதறும் சன்னங்கள், கீச்சிடும் தோட்டாக்கள், வான் சுற்றும் வான்படைக் கழுகுகள் என்று உயிரைக் கையில் கொண்ட கணம் அது. இரைச்சலிலும் இசை உள்ளது என்று இசையை உயிராய் நினைத்த உள்ளம். இசையைக் கூட மறக்க வைத்த கணம் அது. கூவி வந்த எறிகணை ஒளிப் பிழம்பாய் எம் கூடாரத்தில் விழுந்து சிதறியது. அவள் கண்ணின் ஒளியைத் தவிர வேறொன்றைக் கண்டதென்றால் அவ் எறிகணையின் ஒளியைத் தான். அவ்வொளியைக் கண்ட பின்பு என்னால் வேறொன்றையும் காண முடியவில்லை.

அவளின் கண்ணே கதியென்று இருந்த என் கண்கள் பறிபோனதை உணர்ந்து கொண்டேன்.

அவளின் முனகல் சத்தத்தை மட்டும் என்னால் கேட்க முடிந்தது. என் பெயரைத்தான் சொல்லியழு தாள். அவளின் அழுகுரலில் மந்த நிலை ஏற்பட அவளும் காயமடைந்தாள் என்பதை உணர்ந்து கொண்டேன். வீழ்ந்த எறிகணைகள் எங்கள் இருவ ரையும் பிரித்து விட்டதை உணர்ந்தேன். என் மகவைத் தாங்கிய அந்த வயிற்றைக் கிழித்த எறிக ணைச் சன்னம் அவளின் உயிரைக் கேள்விக்குறியாக் கியது. என் கண் பார்வையுடன் வாழ்வும் தொலைந் ததை எண்ணிக் கதறினேன்.

உறவினர், அயலவர் உதவியுடன் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டோம். நாட் கள் சில கடந்தது. வன்னி மண் விடு பட்டு வருத்தம் மிகுந்திருந்தது. சில நாட்களாக அவளின் கண்களைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் மேலிட்டது எனக்கு. மருத்துவர்களின் முயற்சியால் எனக்குக் கண்கள் கிடைத் தன.

கண்கள் திறக்கும் நாளும் வந்தது. அவளின் கண்களைப் பார்த்து வாழும் பலன் மீண்டும் வந்ததையிட்டு இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண் டேன். கண்களின் கட்டுக்கள் அவிழ்த்து விடப்பட்டன. எதிரில் அவள் கயல்விழி கொண்டு சிரித்தாள். உருவமாய் அல்ல ஓவியமாய்.

கதறியேவிட்டேன். மருத்துவம் பலனளிக்கமல் அவள் இறந்துவிட்டாள். இருவரும் வன்னி மண் ணில் தலை சாய்த்திருக்கலாமேஎன்று வாழ்வே வெறுத்தது. என்னை நானே தேற்றிக் கொண்டேன். அவள் நினைவுகளுடன் வாழ நினைத்துக் கொண் டேன். வாழ்கிறேன்....

அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே....

ஆம் என் முகம் பார்க்கும் கண்ணாடியில் அவ ளது கண்களால் அவளது கண்களைப் பார்த்தவாறே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

வாழ்வேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில்
கூகுல், அதன் பிறகு
பேஸ்புக், யூடியூப்
நடுவே டிவிட்டர்,
ஜிமெயில்

**இதற்கு மாற்று மருந்து**

# 'கீப் மி அவுட்'


தினந்தோறும் விஜயம் செய்யும் இணையளங்களின் பட்டியல் எல்லோருக்குமே உண்டு. இதில் வரிசை மாறலாம். ஆனால் தினமும் தவறாமல் செல்லும் இணையத் தளங்கள் என்று சில நிச்சயமாக இருக்கும். இவற்றில் சில இணையத்தளங்களில் மணிக்கணக்கில் செலவிடும் பழக்கம் சிலருக்கும் இருக்கலாம்.

கெட்ட பழக்கம் என்று சொல்லும் அளவுக்கு சிலர் குறிப்பிட்ட அந்த தளங்களுக்கு அடிமையாகி இருப்பதுண்டு. அதாவது அவர்கள் நினைத்தாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அந்தத் தளங்களில் அதிக நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பார்கள்.

உதாரணத்திற்கு 'பேஸ்புக்'கே கதி என இருக்கும் பேஸ்புக் பிரியர்கள் இருக்கின்றனர். சதா யூடியூப்பில் விடியோ காட்சிகளாக பார்த்துக் கொண்டிருக்கும் 'யூடியூப்' பிரியர்களும் இருக்கின்றனர். கூகுலின் இமெயில் சேவையான ஜிமெயில் பற்றி சொல்லவே வேண்டாம். புதிய இமெயில் வந்துள்ளதா என்று பார்க்க கை அடிக்கடி பரபரக்கும்.

இப்படி குறிப்பிட்ட இணையத்தளங்கள் மற்றும், இணைய சேவைகளுக்கு அடிமையாகிப் போவதை இணைய யுகத்தின் பலவீனம் என்றும் சொல்லலாம். இதற்கு மாற்று மருந்து தேவை என்று நினைத்தால் அதற்கும் ஒரு இணையத்தளம் இருக்கிறது. 'கீப்மீ அவுட்' அந்த இணையதளம்.




**மதுபோதையில் ஒருவர்.**

"என்ன றோட்டில தேடிக்கொண்டிருக்கிறாய்?"


"என்ரை மணிக்கூடு விழுந்திட்டுது"

"உண்மையாவா எவ்விடத்தில விழுந்தது?"

"அடுத்த றோட்டிலை"

"அப்ப இந்த றோட்டிலை ஏன் தேடிக்கொண்டிருக்கிறாய்?"

"அந்த றோட்டிலை வெளிச்சம் இல்லை. அதுதான் இஞ்சை தேடுறன்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, நானே விரும்பினாலும் அந்த இணையதளத்தின் பக்கம் போக அனுமதிக்க கூடாது என நீங்கள் கருதும் இணையத்தளங்களின் பட்டியலில் இந்த தளத்தில் சமர்ப்பித்தீர்கள் என்றால் அந்த தளங்களின் பக்கம் செல்லாமல் இந்த தளம் பார்த்துக் கொள்ளும்.

இனி பேஸ்புக் பக்கமேபோக கூடாது என சபதம் எடுத்துக் கொண்டு இந்த தளத்தில் பேஸ்புக் பெயரை சமர்ப்பித்தீர்கள் என்றால் அதன் பிறகு பேஸ்புக் பக்கம் உங்களை அனுமதிக்காமல் இந்தத் தளம் உங்களை காப்பாற்றும். அந்த அளவுக்கு எல்லாம் கட்டுப்பாடு வேண்டாம் என்று நினைத்தாலும் தேவைக்கேற்ப கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரம் பேஸ்புக் பக்கம் போக அனுமதிக்காமல் இருக்கும் படி வரை முறை செய்து கொள்ளலாம். பேஸ்புக் என்பது உதாராணம்தான். அவரவர் பழக்கம் மற்றும் விருப்பத்திற்கேற்ப எந்தத் தளத்தை வேண்டுமானாலும் குறிப்பிட்டு எப்படி வேண்டுமானாலும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும், வாரத்தில் ஒரு நாள் அல்லது மாதத்தில் ஒரு நாள் விரதம் இருப்பது போல் எப்படி வேண்டுமானாலும் இணையவாசிகள் தங்களுக்கான கட்டுப்பாட்டை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

இணையத்தில் சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்களுக்கு இந்த சேவை நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும் என்பதோடு தேவையானதாகவும் இருக்கும்.

இப்படி இணையவாசிகள் தங்களுக்கு தாங்களே விலங்கு மாட்டிக்கொள்ளும் இணையத்தளங்களில் இருந்து முன்னணி 10 இணையத்தளங்களின் பட்டியல், முகப்பு பக்கத்தில் இடம் பெறுகிறது. உங்களுக்கான தளம் அந்த பட்டியலில் இருந்தால் அதனை கிளிக் செய்து கொள்ளலாம்.

அத்தோடு சக இணையவாசிகள் எந்த தளங்களுக்கு எல்லாம் அடிமையாக இருக்கின்றனர் என்னும் தகவலையும் இந்த பட்டியலை பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சுய கட்டுப்பாடு தேவை என்னும் அளவுக்கு எந்த தளங்கள் எல்லாம் இணைய உலகில் பிரபலமாக உள்ளன என்ற தகவலையும் இது தெரிவிக்கும்.

ஆங்கிலம் உள்ளிட்ட சில மொழிகளில் இந்த தளம் செயல்படுகிறது. பிரபலமான தளங்களின் பட்டியலில் ஆங்கிலம் தவிர பிறமொழி தளங்கள் சிலவும் இடம்பெறுகின்றன. அந்த வகையில் மற்ற மொழிகளில் கோலோச்சும் தளங்களையும் இதை பார்த்தே அறிய முடியும்.

இணையவாசிகள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும் இந்த தளத்தை பயன்படுத்தலாம். அல்லது பெரியவர்கள் தங்கள் பிள்ளைகள் பேஸ்புக் போன்ற தளங்களில் அதிக நேரம் செலவிடுவதை கட்டுப்படுத்த விரும்பினாலும் அவர்கள் சார்பில் இந்த சேவையை பயன்படுத்தலாம்.

இணைய முகவரி
http:/keepmeout.com/en



**சர்தாரும் அவரது மனைவியும் குடும்பத்தகராறு காரணமாக விவாகரத்துப் பெறுவதற்காக நீதிமன்றம் சென்றிருந்தார்கள்.**

**நீதிபதி கேட்டார்.**

**"உங்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களை எவ்வாறு இரண்டாகப் பிரித்து இருவரிடமும் ஒப்படைப்பது?"**

**சர்தாஜி சிறிது நேரம் யோசித்து விட்டுக் கூறினார்.**

**"சரி நான் அடுத்த வருடம் விவாகரத்து பெற்றுக் கொள்கின்றேன்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ஜஸ்ரீன்

# மனித ஆற்றல்களின் முகாமைத்துவம்

முகாமைத்துவம், தலைமைத்துவம், தலைமைப் பதவி என்பது வெறுமனே தத்தமது கடமைகளை அல்லது தமக்கிடப்பட்ட அலுவல்களை நடத்தி முடிப்பது மட்டுமல்ல. ஊழியர்களிடமுள்ள ஆற்றல்களைச் சரிவரக் கண்டறிந்து அதற்கேற்ப அவரவர் ஆற்றல்களைப் பயன்படுத்தி உச்சப் பயனை அடைவதாகும்.

அந்த வகையில் முகாமைத்துவம் செய்தல் என்பது ஓர் அரிய சக்தி வாய்ந்த கலையாகும். இன்றும் தமது வினையூக்கத்தால் வெற்றிகரமாக இயங்கிவரும் பல வணிக நிறுவனங்கள், அமைப்புகள், தொழிலகங்கள், ஆதார பூர்வமாகவும், அனுபவரீதியாகவும் இதனை ஏற்றுக் கொண்டு நற்பயனை அடைகின்றன. ஒன்றினைப் பொறுப்பேற்று நடத்துதல், மேலாட்சி செய்தல் அல்லது தலைமைப் பதவி வகித்தல் என்பதன் இன்றைய புதிய கோட்பாடு யாதெனில் அப்பொறுப்பினை வகிப்பதற்குரிய ஆற்றல்கள், தகைமைகள், பண்புகள் என்பனவற்றை அதனை வகிப்பவர்கள் தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும்.

**மனிதர்கள் வளங்களல்ல, அவ்வாறாகக் கருதுவது முறையற்றதொன்றாகும். அது மனித நேயத்திற்கும் முரணானதாகும்.**

மனிதர்கள் வளங்களல்ல, அவ்வாறாகக் கருதுவது முறையற்றதொன்றாகும். அது மனித நேயத்திற்கும் முரணானதாகும். மாறாக அவர்களிடம் பல்வகைப்பட்ட ஆற்றல்கள் உள்ளன என்பதை நாம் அனைவரும் நிச்சயமாக ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

அவரவர்களிடையே உள்ள ஆற்றல்களை முதலில் இனங்காணுதல் வேண்டும். சில முகாமையாளர்கள் ஊழியர்களை ஓர் மனித மூலதனம் அல்லது மனித முதலீடு என உரிமை கோருவது முற்றிலும் முரணானதும் ஆபத்துமானதுமாகும். அனுபவங்களினூடாக பெற்றுக் கொண்ட அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், தற்காலத்துக்குரிய முற்றிலுமான சமுதாய மாற்றங்கள் மற்றும், பொருளாதாரப் பரிணாமவளர்ச்சியின் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நிமித்தமாக கடந்த சில வருடங்களுக்கு மேலாக ஊழியர்களின் எதிர்பார்ப்புகள் மனோபாவங்கள் போன்றவை தீவிரமாகவும், திடீரெனவும், மாற்றத்துக்குள்ளாகியுள்ளன.

நாளுக்கு நாள் நவீனமடையும் இவ்வுலகத்தில் தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தேவைகள் அதிகரிக்கும் போதெல்லாம் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான செலவுகளும் அதிகரிக்கும். செலவுகள் அதிகரிப்பின் காரணமாக வருமானத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையொன்று ஏற்படுகிறது. எனவே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஊழியர்கள் பெரும்பாலும் வருமானத்தின் அளவில் கவனம் செலுத்துகின்றார்கள்.

அதே போன்று நாட்டிலுள்ள ஊழியர்களின் விருப்பு வெறுப்பு மற்றும், அபிலாசைகள் குறித்த ஆய்வுகளின் தொகுப்பின் பிரகாரம் அவர்களது புதிய உளவியல் நோக்கிலான தேவைகள், விருப்புகள் ஆகியன ஒத்திசைவுடையதாகவும் அத்துடன் படிப்படியாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றதென்பது வெளிப்படையாகவே இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைவாக, தற்காலத்து ஊழியர்களின் விருப்பங்களை வகைப்படுத்தலாம்.

**சாதனை படைத்த தலைவர்கள் எல்லோரும் தனிப்பட்ட குழுவினரோ அல்லது நிர்வாகத்தினரோ ஊழியர்களின் ஆற்றல்களை இயன்றளவில் பெருகச் செய்து வெளிப்படுத்துவதற்கு நடைமுறைக்குரிய வழிகளையே பார்க்கின்றார்கள்.**

அ. முதலில் ஊழியர்கள் தாம் தொழில்புரியும் நிறுவனங்கள் அமைப்புகள் அல்லது தொழிற்கூடங்களில் என்னென்ன செயற்பாடுகள் எவ்விதத்தில் நடைபெறுகின்றன என்பதனையும் அச்செயற்பாடுகளை எவரெவர் செயற்படுத்துகின்றனர் என்பதனையும் தமது நிறுவனத்தின் புதிய செயல்கள் நோக்கங்கள் எவை என்பதையும் அத்துடன் முதன்முதலில் முன்னுரிமைவழங்கிச் செய்யப்படவேண்டிய புதியன எவை என்பதையும், அவற்றினை நிறைவேற்றுவதற்கான புதிய வழிமுறை, திட்டமிடல் உபாயங்கள் எவை என்பதையும் மற்றும், அங்கு ஒருவர் விரும்புவதை செய்யாதுவிடின் அவரால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவோமா என்னும் அச்சுறுத்தல் மற்றும் புரிந்து கொள்வதற்குக் கடினமான சிக்கல்கள் போன்றவற்றை மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்வதற்கும் விரும்புகிறார்கள்.

ஆ. ஊழியர்கள், தலைவர்கள் ஏன் முடிவுகளை எடுக்கின்றார்கள் என்பதையும், அதனைவிட ஏன் வேறு ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என்பதையும், எடுக்கப்பட்ட முடிவுகளின் தாக்கங்கள் அல்லது விளைவுகள் எவை என்பதை எல்லாம் நன்கு புரிந்து கொள்ள விரும்புகிறார்கள்.



இ. ஊழியர்கள் பணி இடங்களில் தமது சொந்தமான , சுயமான உட்கருத்துக்களையும் அத்துடன் தமது

அறிவாற்றலால், உடலாற்றலால் மற்றும் திறனாற்றலால் என்பவற்றை ஏனையோருடன் இணைத்தும் கூட்டாகவும் எதிர்காலத்தில் பங்களிப்புச் செய்வதற்கு விரும்புகின்றனர்.

ஈ. ஊழியர்கள் ஒவ்வொருவரும் தமது பணியிடத்தில் தனது நிலை என்ன என்பதையும், தான் அங்கு கவனிக்கப்படுகின்றாரா என்பதையும், தனது விருப்பத்திற்கமைய அங்கீகாரம் மற்றும் மதிப்பு நிர்வாகத்திடமிருந்து தமக்குக் கிடைக்கின்றதா என்பதையும், தான் எதிர்காலத்தில் வளர்ச்சி பெற்று முன்னேற்றம் அடைவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதா என்பதை எல்லாம் முக்கியமாக உணர்ந்து நிறுவனத்துக்குள் ஓர் ஆக்கபூர்வமான பங்கினை வகிக்கவே விரும்புகின்றனர்.

சாதனை படைத்த தலைவர்கள் எல்லோரும் தனிப்பட்ட குழுவினரோ அல்லது நிர்வாகத்தினரோ ஊழியர்களின் ஆற்றல்களை இயன்றளவில் பெருகச் செய்து வெளிப்படுத்துவதற்கு நடைமுறைக்குரிய வழிகளையே பார்க்கின்றார்கள். இதன் மூலம் தலைவர்கள் ஊக்கமளிப்பவர்களாகவும், மாற்றத்தைக் கொண்டு வருபவர்களாகவும் மாற்றமடைகின்றனர்.



நீ
என்னங்களை விடவும்
நுட்பமாய் இருக்கிறாய் நீ.

உன்னைப் பற்றிய கவிதைகள்
கல்லில் செதுக்கப்படும்
பூக்கள் ஆகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சின் அலைகள்

# உப்பவெளிக் காற்று



யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் வல்லைச் சந்தியிலிருந்து பிரிந்து வரணிநோக்கிச் செல்லும் 'உப்பு றோட்' என அழைக்கப்படும் வீதிக்கும் கப்பூதா அந்தனதிடல் ஆகிய கிராமங்களுக்கு இடையில் அமைந்திருப்பது தான் உப்புக் கடல். இது உப்புக் கடல் என அழைக்கப்பட்டாலும் உண்மையில் அது ஒரு கடல் அல்ல. தொண்டமனாற்றில் ஆரம்பமாகி அம்பன்-குடத்தனை-நாகர்கோயில் வரை செல்லும் வாவியில் ஒரு பகுதிதான் அது. ஆனால், ஒரு காலத்தில் அது இலங்கையின் முக்கிய உப்பு விளையும் பகுதிகளில் ஒன்றாக இருந்த காரணத்தால் அது உப்புக் கடல் எனப்பெயர் பெற்றுவிட்டது.

தொண்டமனாற்றில் அணை கட்டப்பட்டு கதவுகள் போடப்பட்ட பின்பு அது தனது உப்பு விளைச்சலை இழந்துவிட்டாலும் பெயரை மட்டும் இழக்கவில்லை. ஒரு காலத்தில் அதற்கென்று ஒரு தனி அழகும் அமைதியும் இருந்தது. மாலை நேரத்தில் கடல்தழுவி வரும் தென்றலில் மெல்லத் தொட்டுச் சிரிக்கும் மெல்லலைகளும், வீதிக்கரைத் தாழம் பற்றைகளுள் காற்றுப் புகுந்து மீட்டும் ஒரு லயம் பிசகாத இசையும் அங்கு ஒரு தனி உலகையே உருவாக்கிவிடும். அதே போன்று கடவைகள், மயானங்கள், உயிலங்கண்டி முனி, கொள்ளிவாய்ப் பிசாசு என இன்னொரு பயம் காட்டும் பக்கமும் அதற்கு உண்டு.

கடந்த வருடம் நான் இந்த உப்பு றோட்டால் பயணித்த போது தொலைந்துபோன அந்த அழகுகள் மட்டுமன்றி புதிதாக முளைத்துவிட்ட அசிங்கங்களும் என் மனதை எல்லையற்ற வேதனைக்குள் தள்ளியது.

கோடை காலங்களில் கடல் உப்பு வீதியை விட்டு வெகுதூரம் உள்ளே போய்விடும். சுழன்றடிக்கும் சோழகக் காற்றில் உப்பு மண் மேலெழுந்து கரணவாய், கரவெட்டி, யாக்கரை, துன்னாலை, கட்டைவேலி ஆகிய கிராமங்களில் பனைகளை குளிப்பாட்டி வெண்ணிறமாக்கி விடும். வீதியில் நடந்து செல்வோரின் வாயில் மட்டுமன்றி உடலிலும் உப்புக் கரிக்கும். வரண்டு வளைந்து நெளிந்து கொப்புகளுடன் நிற்கும் பூவரசுகள் கூட தன் இலைகளை வெண்ணிறம் பூண்டு சலசலக்கும். தாழைகள் மட்டும் தன் நீண்ட மடல்களில் ஒரு புறம் வெண்மையை அனுமதித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஸ்னுபுத்திரன்**

மறுபுறம் தன் சுயநிறம் காட்டிப் படபடக்கும்.

அந்த அழகுகள் இன்றைய நாகரீக உலகத்திற்கு கிட்டாத இன்ப அனுபவங்கள். சில சமயம் உப்பு மண் காற்றில் கலந்து வீசி வரும் அழகு அவர்களுக்கு ஒரு இடையூறாகவும் அமையக்கூடும். ஆனால், நாங்களோ வருடா வருடம் அந்த நாட்களைக் காத்திருந்து அனுபவிப்போம். வீதியிலிருந்து கடல் பக்கமாகத் தொலைவில் தெரிவது நீரா அல்லது கானலா என்று தடுமாறுவதில் கூட ஒரு சுகம் இருக்கத்தான் செய்தது.

கட்டைவேலிச் சந்தியிலிருந்து வல்லை நோக்கி உப்பு வீதியில் வரும்போது இரு புறமும் பனங்கூடல்களும் நடுவே பற்றைகளும் காட்சியளிக்கும். மாரியில் கடல் பனங்கூடலுடன் அலைக்கரமெறிந்து விளையாடும்.



அப்பனங்கூடல்களைத் தாண்டி வர ஒரு புறம் பெரும் அரச மரமும் மறுபுறம் கட்டைவேலிக் கிராமத்திற்கு போகும் உள் வீதிக் கரையில் அந்தக் குளமும் நல்ல தண்ணீர் கிணறும் அமைந்திருந்தன. அந்தக் குளம் தான் அந்த ஊரின் நீச்சல்த் தடாகம். இளைஞர்கள் மட்டுமல்ல இளம்பெண்களும் மீன் குஞ்சுகளாக நீரைக் கிழித்துக் கொண்டு ஒரு புறந்திலிருந்து மறுபுறத்தை அடைவார்கள். கேலிப் பேச்சுகளுக்கும் கலகலச் சிரிப்புகளுக்கும் குறைவற்ற ஒரு ஆனந்த உலகம் அங்கு காட்சியளிக்கும். அருகிலுள்ள நல்ல தண்ணீர் கிணற்றருகில் வரிசையாகக் குடங்கள் அடுக்கப்பட்டிருக்கும். ஒரு புறம் குடங்கள் நீரால் நிரப்பப்பட மறுபுறம் அங்கு நிற்கும் பெண்களால் ஊர்ப் புதினங்கள் அந்த இடத்தில் நிரப்பப்படும்.

உழைப்பில் இறுகிப்போன உடம்பில் மேல் சட்டை அணியாது சேலையை மார்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு தலையில் ஒரு குடமும் இடுப்பில் ஒரு குடமுமாக வீதியில் நடப்பதே ஒரு தனி அழகுதான். குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு கை பிடியாமல் கையை வீசி வீசி கதைத்துச் சிரித்து நடக்கும் போது எப்படி அந்தக் குடம் சரிந்து விழாமலிருக்கிறது என ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால், கடகத்தையோ குடத்தையோ தலையில் வைத்துக் கைவீசி நடக்கும்போது தென்படும் பின்னழகு எத்தனை வருடங்கள் பயிற்சி எடுத்தாலும் 'ஹை ஹீல்ஸ்' அம்மணிகளால் அடைய முடியாது என்பதை மட்டும் திடமாகச் சொல்லமுடியும்.

ஒரு காலத்தில் மாரியிலும் கோடையிலும் நீர் நிறைந்து காணப்படும் அந்தக்குளம் இப்போ வரண்டு போய் நடுக்குண்டுக்குள் மட்டும் சிறிது நீர் இருந்தது. ஏனைய பகுதிகள் வரண்டு வெடித்துப் போய்க் கிடந்தது. அந்தக் கிணற்றடியிலும் சன நடமாட்டத்தையே காணவில்லை.

சற்றுத் தொலைவில் ஒரு இராணுவக் காவலரண் மட்டுமேதென்பட்டது. குளமும் கிணறும் பாவனையற்றுப் போய்விட்டது போலவே தோன்றியது. அந்த வீதிக் கரை அரச மரமும் காணாமல் போய் விட்டது. சிலவேளை அரச மரத்தடியில் புத்தர் வந்து குந்தி விடுவாரோ என்ற பயத்தில் அம் மரம் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். அந்தச் சந்தியைத் தாண்டி சிறிது தூரம் வந்தபோது அளவிட முடியாத திகைப்பு நெஞ்சைக் கௌவிக் கொண்டது. சுழன்றெழும் சோழகக் காற்றில் வெண்மண்ணைக் காணவில்லை. வேறு ஏதோவெல்லாம் விண்ணேறிப் பறந்து வானை நிறைப்பதுபோல தோன்றியது. நன்றாக உற்று நோக்கியபோது அவை பொலித்தீன் பைகள் எனப்புரிந்து கொள்ள முடிந்தது.

இடப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தபோது ஒரு காலத்தில் பட்டி பட்டியாக மாடுகள் மேயும் உப்புக் கடற்கரை, நகரங்களின் குப்பைத் தொட்டியாக மாறி விட்டிருந்தது. அதில் சகல கழிவுகளும் கொட்டப்பட்டு தாங்க முடியாத துர்நாற்றம் வீசியது. நோய் தீர்க்கும் சக்தி பெற்ற உப்புக் காற்று மாசு பட்டு இப்போ நோய் பரப்பும் நச்சு ஊற்றாக மாறி விட்டிருந்தது. அவற்றிலிருந்து காற்றில் எழும்பிய பொலித்தீன் பை சில பனைகளைத் தழுவ ஏனையவை கிராமத்தை நோக்கிப் பயணித்தன.

ஒரு காலத்தில் பட்டி பட்டியாக மாடுகள் மேயும் உப்புக் கடற்கரை, நகரங்களின் குப்பைத் தொட்டியாக மாறி விட்டிருந்தது. அதில் சகல கழிவுகளும் கொட்டப்பட்டு தாங்க முடியாத துர்நாற்றம் வீசியது. நோய் தீர்க்கும் சக்தி பெற்ற உப்புக் காற்று மாசு பட்டு இப்போ நோய் பரப்பும் நச்சு ஊற்றாக மாறி விட்டிருந்தது. அவற்றிலிருந்து காற்றில் எழும்பிய பொலித்தீன் பை சில பனைகளைத் தழுவ ஏனையவை கிராமத்தை நோக்கிப் பயணித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் சில அப்பகுதி மக்களால் புனிதமாகப் போற்றப்படும் வெல்லன் பிள்ளையார் ஆலயத்தின் கர்ப்பக்கிரகக் கோபுரத்தில் தஞ்சமடையவும் கூடும்.

அவ் வீதிக்கரையில் நின்ற பிரமாண்டமான பூவரசு இருந்த இடத்தையே அடையாளம் காணமுடியவில்லை. அதன் பொந்துக்குள் மட்டும் இருவர் அமர்ந்திருக்கும் அளவுக்கு அது அவ்வளவு பெரியது. யாரோ ஒரு புண்ணியவான் அந்தப் பொந்திற்குள் தீ மூட்டி விட அது உள்பக்கமாகவே எரிந்து விழுந்து விட்டதாகவும் அதன் பின்பும் அது பல வாரங்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததாகவும் பிறகு அறியமுடிந்தது. சற்றுத் தொலைவில் நின்ற உயிலங்கன்றும் காணாமல் போய்விட்டது.



யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் கோயிலிருந்து புறப்படும் முனி வல்வையில் இருக்கும் கோயிலில் தங்கி பின் உயிலங்கன்றடியில் இளைப்பாறி விட்டு பருத்தித்துறைக் கோட்டை முனியப்பரை அடைவதாக ஒரு ஐதிகம் நிலவி வந்தது. முனி வலம் வரும் போது பரிகலங்கள் செம்மறி ஆடுகளின் உருவத்தில் வருவதாகவும், மணியடித்துக் கொண்டு சங்கு ஊதி வரும்போது யாராவது குறுக்கே வந்தால் முனி அடித்துவிட்டுப் போய்விடும் எனவும் மறுநாள் அவர் இரத்தம் வற்றிச் செத்துவிடுவார் எனவும் கூறுவதுண்டு. ஆனால் நான் என்றுமேஅந்த ஊர்வலத்தைக் கண்டதில்லை. எனினும், நான் ஒரு நாள் மாலையில் காடன் வீட்டு ஆச்சிமுத்து அத்தையின் செம்மறியாடுகள் எழுந்து மணி ஒலிக்கப் போன போது பயந்தது உண்மைதான். இப்போ உயிலங்கன்றும் இல்லை. பழைய பூவரசும் இல்லை. முனியப்பர் ஊர்வலம் பற்றிய கதைகளும் முற்றாகவே மறக்கப்பட்டு விட்டன.

சிறுவயதில் தூரத்தில் கொள்ளி வாய்ப் பிசாசுகளைக் கண்டு நிறையவே பயந்ததுண்டு. பிறகு அது சதுப்பு நிலங்களில் தோன்றும் மீதேன் வாயு என்றறிந்த போது அந்த நம்பிக்கையும் காணாமல் போய்விட்டது.

சோனப்புச் சுடலையில் ஒரு பிரேதம் எரிந்து கொண்டிருந்தது. கொள்ளி வைத்து விட்டு உறவினர்கள் சென்று விட்டபின்பு மூன்று பேர் நின்று சிதையை எரித்துக் கொண்டிருந்தனர். முன்பெல்லாம் இரண்டு மணிக்கு முன்பாகப் பிரேதத்தை எரித்து விடுவார்கள். அப்பகுதியில் வீட்டுக்கு ஒருவர் என்றாலும் தென்னிலங்கையில் கடை வைத்திருப்பவராகவோ, அரச ஊழியராகவோ இருப்பார். ஒருவர் இறந்து விட்டால் அவரின் உறவினரின் வருகைக்காக யாழ் தேவியைப் பார்த்துக் கார் கொடிகாமத்தில் காத்திருக்கும். அதில் அவர் ஏறி வந்ததும் கிருத்தியம் முடித்து பிரேதத்தைத் தூக்க வேண்டியது தான்.

இப்போ யாழ் தேவியை எதிர்பார்த்துப் பிரேதம் எடுக்கும் நிலை இல்லாததாலோ என்னவோ மாலை மயங்கும் வேளையிலும் பிரேதம் எரிந்தது. சில சமயம் மரண வீட்டு துடக்குக்கழிய முழுகிவிட்டு மாலைப் பூசைக்கு வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோயிலுக்குப் போக வேண்டிய பழக்கமும் இல்லாமல் போயிருக்கலாம்.

கடல் பக்கமாக, கடலுக்கு அப்பால் மங்கலாகத் தெரிந்த பனங்கூடல்களின் பின்னால் சூரியன் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது. வானம் செந்நிறமாக சூரியன் ஒரு நெருப்புக் கோளமாகியது. தூரத்தில் தெரிந்த நீரும், நிலமும் பொன்னிறம் பூண்டிருந்தன. ஆனால் முன்பு கரையோரத்தில் இடையிடையே காணப்படும் பிட்டிகளையும் அதில் நின்று அழகு பொழியும் தாழைகளையும் காணவில்லை.

முன்பெல்லாம் அடிவானத்தில் சூரியன் மறையும் போது பெரிய ஒரு கோளமாக எழும்பி எழும்பி விழுவதைப் பார்த்து ரசித்து மகிழ்வதுண்டு. எல்லாம் மாறிய பின்பும் அது மட்டும் மாறாது என்றே நான் நம்பினேன்.

ஏனோ அந்நாட்களின் அழகு அற்றுப்போய் ஒரு இயந்திரத்தனமான வரட்டுத் தன்மை நிலவுவதாகவே எனக்குத் தோன்றியது.

ஊருக்குள் இறங்குவதற்காக முள்ளி வீதியில் இறங்குவதற்கு முன்பாக மீண்டும் ஒரு முறை அடிவானத்தைப் பார்த்தேன். சூரியன் மறைந்து விட்டது. செவ்வானத்தின் பின்னணியில் காற்றில் எழுந்த பொலித்தீன் பைகள் என்னை நோக்கிப் படையெடுப்பது போன்ற ஒரு பயங்கரத்தை உணர்ந்தேன். வேகமாக ஊருக்குள் இறங்கிப் பயணிக்க ஆரம்பித்தேன். ஏதோ எனது சிறிய கிராமத்தில் கூட உலக மயமாக்கல் எல்லா இனிமைகளையும் விழுங்கி விட்டது போலவே தோன்றியது.

**சேலையை மார்ப்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு தலையில் ஒரு குடமும் இடுப்பில் ஒரு குடமுமாக வீதியில் நடப்பதே ஒரு தனி அழகுதான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**குழந்தைகள்** இல்லாத பெண்கள் அடுத்த வருடம் முதல் கருப்பை மாற்றுச் சிகிச்சை மூலம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென முன்னணி ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். விலங்குகளில் மேற்கொள்ளப் பட்ட பரிசோதனைகள் வெற்றிகரமாக அமைந்ததைத் தொடர்ந்து நன்கொடையாகக் கொடுப்போரிடமிருந்து பெற்றுக்கொண்ட கர்ப்பப்பைகளை பெண்களுக்குப் பொருத்துவதற்கு மருத்துவர்கள் தயாராக உள்ளனர்.

குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் வயதை எட்டியுள்ள பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு இந்த எதிர்வுகூறல் நம்பிக்கையை ஏற்படுத்துமென பிரிட்டனின் 'டெய்லி மெயில்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

நோயினால் கர்ப்பப்பை அகற்றப்பட்ட அல்லது கர்ப்பப்பை இல்லாமல் பிறந்த பெண்களுக்கு இந்த

# கருப்பை மாற்று சிகிச்சை







விடயம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது. இது மனதின் சீரியதன்மை யைப் பாதிக்கும் என விமர்சகர்கள் கூறுகின்ற னர். அதன் பாதுகாப்பு தொடர்பாகவும் கேள்வி எழுப்பியுள்ளனர். பெண் அவயவங்கள் மாற்று சிகிச்சை விடயத்தில் உலகில் முன்னணி யாகத் திகழ்வோரினால் இந்த எதிர்வு கூறல் முன் வைக்கப்பட்டிருக்கிறது. சுவீடனின் 'கோதன் பேர்க்' பல்கலைக்கழகத்தின் பேரா சிரியர் மற்ஸ் பிரான்ஸ்ரோம் சுமார் 10 வருட காலம் இந்த சிக்கலான சத்திர சிகிச்சை நுட்பங் களுக்குத் தேவைப்படும் விடயங்கள் குறித்து ஆராய்ந்திருக்கிறார். அதாவது கர்ப்பப்பை மாற்று சிகிச்சைக்கு வேண்டிய பொருத்தமான நுட்பங்கள் குறித்து ஆராய்ச்சி செய்துள்ளார். எலிகள் செம்மறி ஆடுகள், பன்றிகள், போன்ற வற்றில் மாற்று கர்ப்பப்பைகளைப் பொருத்தி அவருடைய குழு வெற்றிகண்டுள்ளது. இதனை பெண்கள் மத்தியில் பிரயோகிப்பதில் வெற்றி காண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனில் 'கம்மர் சுமித்' இல் உள்ள பிரிட்டிஷ் குழுவொன்று கர்ப்பப்பை மாற்றுச் சிகிச்சையில் முன்னேற்றம் கண்டுள்ளது. எலிகளில் இந்தப் பரிசோதனையை வெற்றிகரமாக அக்குழு முன்னெடுத்துள் ளது. மனிதரில் கர்ப்பப்பை மாற்று சிகிச் சையானது இதுவரை 2000 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஆனால், அந்த உறுப்பு பலனளிக்கவில்லை. நான்கு மாதங்களில் செயலிழந்துவிட்டது.

இந்த மாற்றுச் சத்திரசிகிச்சைக்கு பயன் படுத்தப்படும் கர்ப்பப் பைகள் உயிருடன் இருக்கும் அல்லது இறந்த கொடையாளிக ளிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். உயிருடன் இருக்கும் சகோதரி போன்ற நெருங்கிய உறவினரிடமிருந்து அவற்றைப் பெற முடியுமென மருத்துவர் கள் கூறுகின்றனர். அதாவது அந்தப் பெண் சகோதரி போன்ற நெருங்கிய உறவு உள்ள பெண் தான் மகப்பேற்றைப் பூர்த்தி செய்த பின்னர் தனது கர்ப்பப்பையை வழங்க முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ விகிர்தன்

# இந்தியாவின் 50,000 வீடுகள். ஒரு கனவுத் திட்டமா?



செல்வந்தர்கள் எத்தனை வீடுகளையும் கட்டலாம். ஆனால், சாதாரண மனிதன் சொந்தமாக வீடு ஒன்றை கட்டுவதென்பது ஒரு சாதனைதான். சில சமயம் அது வாழ்நாளில் ஒரு தடவை மட்டுமே சாத்தியமாகும். அல்லது 'சொந்தமாக ஒரு வீடு' என்பது ஒரு கனவாகவே முடிந்துவிடும்.

சில வருடங்களுக்கு முன்பு 'வீடு' என்றொரு தமிழ்த் திரைப்படம் வெளிவந்திருந்தது. ஒரு சாதாரண மனிதன் தனது குடும்பத்திற்காக ஒரு வீட்டை கட்டுவதற்கு படும் துன்பங்களும், துயரங்களும் அத்திரைப்படத்தில் ஆழமாக சித்தரிக்கப்பட்டிருந்தன.

வன்னியில் இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான வீடுகள் தகர்ந்து தரை மட்டமாகின. முன்னர் இடம் பெற்ற போர்களின் போதுஅழிந்து போன அந்த வீடுகளை கட்டுவதற்கு அம்மக்கள் மேற்கொண்ட கடினமான முயற்சி, உழைப்பு என்பன குறித்து எழுதுவதானால் அதற்கு பல பக்கங்கள் தேவை.

உதாரணமாக கிளிநொச்சிப் பகுதியில் 1995ஆம் ஆண்டு நடைபெற்ற 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்கள் ஆறு வருடங்களுக்குப் பின்னரே கிளிநொச்சி மையப் பகுதிகளிலுள்ள தங்கள் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பினர். காடாகிப் போயிருந்த காணிகளைத் திருத்தி, எறிகணைகளால் அழிவுற்ற பயன்தரு மரங்களுக்குப் பதிலாக புதிய மரக்கன்றுகளை நட்டு நீருற்றி வளர்த்தெடுத்து, தங்கள் உழைப்பிலிருந்து சிறிது சிறிதாக சேமித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுக்க அரசாங்கத்திடம் பணமில்லை**

பணத்தில் சிமெந்து, மணல் வாங்கி குடும்ப உறுப்பினர்களே அவற்றைக் குழைத்துக் கல்லரிந்து, கொஞ்சம் கொஞ்சமாக கட்டடத்தைக் கட்டி ஒரு சிறிய வீட்டை அமைப்பதற்கு அவர்களுக்கு வருடங்களாகின. அவ்வாறு கடும் முயற்சியானல் கட்டப்பட்ட சிறு வீடுகளும் போரினால் சிதைத் தழிக்கப்பட்டன.

போரினால் இடம்பெயர்ந்து, கூடாரங்களில் அகதி வாழ்வில் உழன்று, தற்போது சொந்த நிலங்களில் குடியமர்ந்து வரும் மக்கள் தங்களுக்கான ஒரு வீட்டை அமைத்து கொள்வதில் பலரது உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இழந்த உயிர்களைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் அம்மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக அரசுத் தலைமையினால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. பின்னர் மாறுபட்ட குரல்களில் அவை பேசப்பட்டன.

பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுக்க அரசாங்கத்திடம் பணமில்லை எனவும், வன்னியில் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாக இருப்பதால் அவர்கள் தங்களது வயல்களில் நெற்செய்கையை மேற்கொள்ள அரசாங்கம் உதவிகளை வழங்கும் எனவும், இரு போக விளைச்சல்களுக்குப் பின்னர் அவர்களே தங்களுக்கான வீடுகளை அமைத்துக் கொள்ள முடியும் எனவும் சொல்லப்பட்டது. இது ஒரு கண்துடைப்பான விடயமாகவே பாதிக்கப்பட்ட மக்களால் உணரப்பட்டது.

இந்நிலையில் தான் இந்தியா ஐம்பதினாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளதாக செய்திகள் வெளியாகின. வீடு பற்றிய கனவுகளோடு இருந்த மக்களுக்கு இது ஒரு இனிப்பான செய்தியாக வந்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஸ்ணாவும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இரண்டாயிரம் வீடுகளை அமைப்பதற்கான அடிக் கல்லையும் நாட்டி வைத்தார். ஐந்தரை இலட்ச ரூபா செலவில் ஓரளவிற்கு வசதியான வீடுகள் அமைக்கப்படும் எனவும் இந்தியத்தரப்பால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வந்து சென்ற சில தினங்களுக்குப் பின்னர் திடீரென ஒரு செய்தி வெளியாகி இந்திய வீட்டுத்திட்டம் பற்றிய மக்களின் கனவை கலைப்பது போன்ற நிலையை ஏற்படுத்தியது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச சகல வீடமைப்புத் திட்டங்களையும் பிற்போடுமாறு அறிவித்துள்ளார் என்பதான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின.

அதனைத் தொடர்ந்து இன்னுமொரு செய்தியும் வெளிவந்தது. அதாவது இந்தியாவின் நிதியுதவியுடன் புதிதாக வீடுகளை அமைப்பதை விடவும் சேதமுற்ற





வீடுகளை புனரமைப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படும் என அரசதரப்பு வெளியிட்ட செய்தியே அது. இந்திய நிதியுதவியுடன் 45 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படும். ஐயாயிரம் வீடுகளே புதிதாக கட்டப்படும் என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிறகு இந்தியத் தூதரகம் இதற்கு விளக்கமளிக்கும் விதமாக செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தது. இந்திய நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள ஐம்பதினாயிரம் வீடுகள் வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் அமைக்கப்படும் எனவும், அதே வேளையில் இத்திட்டத்திற்காக மத்திய மாகாணத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்செய்திகள் சரியான விளக்கமற்றிருந்ததோடு பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை இல்லாமல் செய்யும் விதமாகவும் அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிறகு இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாக எவ்விதமான பேச்சுக்களும் இல்லை. அண்மையில் லண்டனிலிருந்து ஒரு குழுவினர் இந்தியாவின் மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும், அதிகாரிகளை சந்தித்தனர். அக்குழுவில் யாழ்ப்பாணத்திலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். அப்போது தமிழ் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து கலந்துரையாடப்பட்டதோடு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்தியாவினால் அமைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்ட ஐம்பதினாயிரம் வீடுகள் பற்றிய கேள்விகளும் முன்வைக்கப்பட்டன. இந்த வீடமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் காரணமாக இத்திட்டம் சில காலங்களுக்கு பிற்போடப்பட்டிருப்பதாக இந்தியத் தரப்பினர் அக்குழுவினரிடம் கூறியுள்ளனர்.

இந்திய வீட்டுத்திட்டத்தை இந்தியாவே நேரடியாக நடைமுறைப்படுத்துவதா? அல்லது இலங்கை அரசின் ஊடாக அதற்கான நிதியை வழங்கி நடைமுறைப்படுத்துவதா? இந்தியாவின் இந்த வீட்டுத்திட்ட உதவிகள் வடக்கு கிழக்கு தவிர்ந்த



வேறு பகுதிகளுக்கும் உள்வாங்கப்படுவதற்கான திட்டங்கள் உள்ளனவா?

இவ்வாறான விடயங்களைத் தீர்மானிப்பதிலேயே சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

நாடு முழுவதும் வறுமைநிலையிலான மக்கள் பலர் வாழ்கின்றுர்கள். சொந்த வீடுகளற்ற மக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். இவர்களுக்கும் உதவிகள் கிட்ட வேண்டும், வீடுகளற்ற சகலருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. ஆனால், வடக்கு கிழக்கில் இடம்பெற்ற கடுமையான போர் காரணமாக வீடுகளையும் சொத்துக்களையும் இழந்துள்ள மக்களுக்கு அவற்றை மீளமைத்துக் கொடுக்க வேண்டியது அவசரமும் அவசியமானதுமான பணி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை தனியாக அரசாங்கம் மேற்கொள்ள முடியாவிட்டால் வெளிநாடுகள், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இவற்றை மேற்கொள்ள முன்வரும் போது அதற்கு தடையாக இருப்பது நியாயமானதல்ல.

அயல் நாடாக இருக்கும் இந்தியாவிற்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பாக அதிகமான அக்கறை இருக்க வேண்டியது யதார்த்தமானதாகும். இலங்கை அரசாங்கம் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கு இந்தியா வழங்கிய உதவிகள் குறித்து இப்போது வெளிப்படையாகவே பேசப்படுகின்றது, விவாதிக்கப்படுகின்றது. போரை முடிவிற்கு கொண்டுவர பல்வேறு உதவிகளைப் புரிந்த இந்தியா போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவவும் முன்வர வேண்டும். அண்மையில் காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி சோனியா காந்தி இலங்கைத் தமிழர்கள் குறித்து தாம் அக்கறையாகவும் அவதானிப்புடனும் இருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால், இவ்வாறான உறுதி மொழிகள் நடைமுறைப்படுத்தப்படும் போதே மக்களுக்கு இவ்வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படும்.

**சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு இரண்டரை இலட்ச ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எதுவுமேநடைமுறைக்கு வரவில்லை.**



கிளிநொச்சி உட்பட வன்னியின் பல பகுதிகளில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான படிவங்களும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. சேதமான வீடுகளைத் திருத்தவதற்கான பதிவுகளும் சில பகுதிகளில் பூர்த்தியாக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு இரண்டரை இலட்ச ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எதுவுமேநடைமுறைக்கு வரவில்லை.

இதனால், இந்திய வீட்டுத்திட்டம் நடைமுறையில் வருமா என்கிற பலத்த சந்தேகம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இந்தியா ஈழத்தமிழர்களுக்காக வழங்கும் உறுதி மொழிகள் யாவும் தன்னலம் சார்ந்ததாக - அதன் நகர்வுகள் அரசியல், பூகோள நலன் சார்ந்ததாக உள்ளமை வெளிப்படையானது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைப்பதென்பதும் இதனடிப்படையிலானது தானா என்கிற சந்தேகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ளமைதவறானது என்று கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழகே அழகு

சிலர் முகப் பொலிவு பெற வேண்டும் என்று இரசாயனம் கலந்த அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்துவதால் இயற்கையான அழகு மாறி பல இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது. இக்கால கட்டத்தில் இயற்கை மூலிகைகளால் ஆன அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தி முகப் பொலிவினைப் பெறலாம்.

சோற்றுக்கற்றாழைச் சாறு எடுத்து அதில் அரிசி, வெந்தயம் இரண்டையும் சேர்த்து ஊறவைத்து, ஒருமணி நேரம் கழித்து நன்கு மைபோல் அரைத்து முகத்தில் புசி, அது காய்ந்த பின் சுத்தமான நீரினைக் கொண்டு முகம் கழுவி வந்தால், முகம் பொலிவு பெறும்.

புசி காய்ந்த பின் கழுவி வந்தால் கண்களைச் சுற்றிய கரு வளையம், முகக் கருமை, முகப்பரு, கழுத்துப் பகுதி கறுப்பு, முகத்தில் உண்டான தழும்புகள், மூக்கில் ஏற்படும் கறுப்பு போன்றவை நீங்கும்.

## பேன், பொடுகு மாற

வேப்பிலை, மருதோன்றி இலை, இரண்டையும் எடுத்து அதனுடன் சிறு துண்டு வசம்பு சேர்த்து மைபோல் அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால், பேன், பொடுகு நீங்கும். முடி உதிர்வது குறையும். புழுவெட்டு நீங்கும்.



## பருக்கள் மறைய

பொதுவாக பருக்கள் எண்ணெய் பதார்த்தங்களை உண்பதால் ஏற்படுகிறது. மேலும் உடலில் உள்ள கொழுப்புப் பொருட்களாலும், மன இறுக்கம், மலச்சிக்கல் இவற்றாலும் உண்டாகிறது. உணவு முறை மாறு பாட்டாலும் முகப்பரு தோன்றும்.

முகப்பருக்கள் மாறி முகம் பொலிவு பெற, முட்டையின் வெள்ளைக் கருவினை எடுத்து அதில் அரைக் கரண்டி பயிற்றமாவு கலந்து முகத்தில் தடவவும். அது காய்ந்தபின் முகத்தைப் பால் கொண்டு கழுவி பின் நீரால் சுத்தம் செய்யவும். இவ்வாறு வாரம் இருமுறை செய்துவந்தால் பருக்கள் மறையும்.

செம்பருத்திப் பூ, ரோஜாமொட்டு, வெள்ளரிக்காய் சாறு இவற்றை எடுத்து ஒன்றாகச் சேர்த்து நீர் விடாமல் அரைத்து அதனுடன் பச்சைப் பயறு மாவு கலந்து குழைத்து முகத்திலும் கழுத்துப் பகுதியிலும்


## உடல் நாற்றம் நீங்க


வெட்டிவேர், காய்ந்த ரோஜா இதழ், எலுமிச்சைப் பழத்தோல் ஆகியவற்றை மெல்லிய துணியில் கட்டி தண்ணீரில் ஊறவைத்து அந்த நீரைக் கொண்டு குளித்து வந்தால், உடல் நறுமணம் உண்டாகும். நாற்றம் நீங்கும். உணவில் காய்கறிகளையும், பழங்களையும் அதிகம் சேரத்துக்கொண்டால் உடல் நாற்றம் ஏற்படாது.

காய்ந்த எலுமிச்சம் பழத்தோலை தூளாக்கி அதனுடன் காய்ந்த ரோஜா இதழ், வெட்டிவேர் ஆகியவற்றையும் தூள் செய்து இவைகளை சம அளவு எடுத்து, சிறிது சந்தனத் தூள் சேர்த்து நீரில் குழைத்து முகம் மற்றும் உடலெங்கும் புசி குளித்து வந்தால், பித்தம் தணிந்து, பித்தச்சூடு குறைந்து வியர்வை நாற்றம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எதுமாதிரியும் இல்லாத புது மாதிரியான மொபையில் சாதனம்

**லப் டொப்** கம்ப்யூட்டரும் இல்லை; செல் போனும் (ஸ்மார்ட்போன்) இல்லை; இரண்டுக்கும் இடைப்பட்ட புதியதொரு மொபைல் சாதனம்.

அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள புதிய சாதனாமான 'ஐ பாட்' பற்றி அதன் தலைமை அதி காரி ஸ்டீவ் ஜாப்ஸ் இப்படித் தான் வர்ணித்துள்ளார். இது மாயத் தன்மைமிக்க புரட்சிகரமான தயாரிப்பு என்று அவர் புகழ்ந்து தள்ளியுள்ளார். 'ஜாப்ஸ் ஐ பாட்' பெயரே அசத்தாலாகத்தான் உள்ளது.

'ஐபொட்' மற்றும் 'ஐபோன்' ஆகியவற்றின் தொடர்ச்சியாக அப்பிள் அறிமுகம் செய்துள்ள புதிய சாதனம் அறிமுகமாகியுள்ளது. பொதுவாகவே அப்பிளின் புதிய அறிமுகம் என்றாலே ஒரு மிதமிஞ் சிய எதிர்பார்ப்பு இருக்கத் தான் செய்யும். சில ஆண்டுகளுக்கு முன் 'ஐ போன்' அறிமுகமான போது ஒரு திருவிழாவிக்கு நிகரான கோலாகல நிகழ் வாக அமைந்தது.

'ஐ போன்' வெற்றியை தொடர்ந்து அப்பிள் செல்போன் சந்தையிலும் நுழையலாம் என்று ஆருடம் கூறப்பட்டு வந்த நிலையில் அப்பிள் 'ஐ போனை' களமிறக்கி அசத்தியது. ஐ போனின் வெற்றி இன்று மாபெரும் தொழில்நுட்ப சகாப்தமாக திகழ்கிறது. 'ஐ போனின்' வருகை செல் போன் சந்தையையே மாற்றி அமைத்து விட்டது.

இந்தப் பின்னணியில் தான் கொஞ்ச காலமாகவே அப்பிள் புதியதொரு சாதனத்தை அறிமுகம் செய்ய உத்தேசித்திருப்பதாக செய்திகள் வெளியாகின. நட்சத்திரங்களின் காதல் கதை பற்றிய அனுமானங் களை வெளியிடும் உற்சாகத்தோடு அப்பிளின் புதிய சாதனம் பற்றிய ரகசிய தகவல்களும் யூகங்களும் வெளியாகி வந்தன.

இதனிடையே அப்பிள் நிறுவனம் 27 ஆம் திகதி இந்த சாதனம் வெளியாகும் என்று அதிகாரப் பூர்வமாக அறிவித்த நிலையில் இந்த யூகங்கள் வலுப் பெற்றன. புதிய வகை 'டெப்லெட்' கம்ப் யூட்டராக இது இருக் கும் என்பதை பெரும் பாலான யூகங்கள் உறுதி செய்தன.



இந்த 'டெப் லெட்' கம்ப்யூட் டர் 'ஈ புக்' வசதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாக இருக்கும், 'வீடியோ கேம்' மற்றும் செயலிகளில் புதிய பாய்ச்சலாக அமையும் என்றெல்லாம் பேசப்பட்டது. அதைவிட முக்கியமாக நாளிதழ்கள் மாறு பத்திரிக்கைகளுக்கான புதிய வழியாகவும் விளங்கும் என்று கணிக்கப்பட்டது.

இந்நிலையில் 'அப்பிள்' வழக்கப்படி அதன் நட்சத்திர தலைமைஅதிகாரியான ஸ்டீவ் ஜாப்ஸ் பரபரப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய சாதனமான 'ஐ பாட்' அறிமுகம் செய்துள்ளார். 'ஐ பாட்' டெப்லெட் வகையை சேர்ந்ததாக அமைந்துள்ளது.

'ஐ போனை' விட சற்றே பெரிதாக இருந்தாலும் தோற்றத்திலும், வடிவமைப்பிலும் அதனை ஒத்திருக்கிறது. அரை அங்குலம் அகலம் கொண்ட 'ஐ பாட்' லப்டொப்பை விட எடை குறைந்ததாக உள்ளது. 'வை பை' மற்றும் 'ப்ளுரூத்' வசதி கொண்டுள்ளது. அதன் சிறப்பம்சம் என்று பார்த்தால் பத்து மணி நீடிக்கக் கூடிய பட்டரி, அழகான தொடு திரை, நியூ புக் என்னும் புத்தக வாசிப்பு வசதி என அடுக்கி கொண்டே போகலாம்.

இதில் 'வீடியோ கேம்' ஆடலாம். படம் பார்க்கலாம். விடியோ கேமைபொருத்தவரை வேகத்தை கூட்டும் வசதி கூடுதலாக உள்ளது. படம்



பார்க்க ஏற்ற பெரிய திரை கூடுதல் சிறப்பம்சம் புத்தக வசதியை பொறுத்தவரை புத்தக அலுமாரி போன்ற அமைப்பிலிருந்து புத்தகத்தை உருவும் வசதியும் பக்கங்களை தொட்டுத் திருப்பும் வசதியும் குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றையும் விட ஆச்சர்யம் இதன் விலை தான். ஆயிரம் டாலராவது இருக்கும் என்று கூறப்பட்ட நிலையில் 499 டாலர் முதல் கிடைக்க உள்ளது.





# காதல் என்பது..

1. காதல் என்பது ஒரு அட்சய பாத்திரம்
அதைத் தாங்குவது கைகளல்ல.
2. கண்களால் இதயம் களவு போவது.
3. அன்பு+விபத்து+ஆபத்து = காதல்!
4. தாய்மை+நட்பு+காமம்=காதல்
5. "இலைகளைப் போல் சலசலக்காமல்
வேர்களைப் போல் தாங்கி நிற்பதே காதல்"
6. வென்றால்–கல்வெட்டு
தோற்றால்– கல்லறை.
7. சில பேரை படைக்கிறது.
சில பேரை அழிக்கிறது.
8. உள்ளுக்குள்ளாகவே பூத்து... காய்த்து
கனியும் உன்னத உணர்வு.
9. தொடக்கத்தில்– வசந்த காலம்
இடையில்– குளிர்காலம்
முடிவில்–கோடைகாலம்
10. கையளவு இதயத்தை பிரபஞ்சமாய்
விரிய வைக்கும் மந்திரச் சொல் காதல்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**■ நெடுந்தீவு மகேஷ்**




# மின்னலிடும் கீற்றுக்காய்

ஈர விழிகாய்ந்தும் இறங்காத பாழ்நினைவு.
ஆற அமர்ந்தாலும் ஆறாத நீள்துயரம்.
தீர அழுவதற்கும் திசைகாணாப் பெருவெளியின்,
ஓரம் மகிழ்வழிந்து உட்கார்ந்து இரைமீட்கும்.
வேகப் புயல்அடங்கி ஓய்ந்தாலும் தீராத
சோகம் படர்ந்து சுகம் காணாப் பச்சைவெளி.
மேகம் தூல்கொண்டெழுந்து மின்னலிடும் கீற்றுக்காய்,
தாகம் மிகுந்து தவித்திருக்கும் இன்னுயிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


GATEWAY CfICT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK
TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY



- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY CfICT | GATEWAY Language Centre | GATEWAY KIDS SCHOOL OF COMPUTING | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen | e-TYPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org